# ஆங்கிலத்தை படிப்படியாக புறக்கணிக்க வேண்டும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 158
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 3 ஜமா. அவ் 14 ஞாயிற்றுக்கிழமை [19-7-70]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

## நல்லூரில் உதவி மந்திரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

'சிங்கள—தமிழ் இனத்தவர்களாகிய நாங்கள் முதலில் எம் சுயபாஷைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஏகாதிபத்தியத்தைத் திணிக்கும் அன்னிய ஆங்கில பாஷையைப் பின்வைத்துப் படிப்படியாகப் புறக்கணிக்க வேண்டும். எம்மொழிகள், கலாச்சாரங்கள் ஆங்கில மொழிக்கும் கலாச்சாரங்களுக்கும் எந்தவகையிலும் குறைந்தவை அல்ல.'

'உதவி கலாச்சார அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நல்லூர்க் கிளைக்கு நேற்று விஜயம் செய்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தங்கள் மொழிகளையும் கலாச்சாரங்களையும் காப்பாற்றுபவர்கள் தாழ்வு நிலையில் இருக்கும் ஏழை மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களுமே. ஆங்கில உடை உடுத்தி அம்மொழியில் பிணைக்கப்பட்டுள்ள கனவான்கள், முதலாளிகள் தான்—தங்கள் வர்க்கங்களைக் காப்பாற்றுவதற்காக தாம் விரும்பாத சிங்கள—தமிழ் மொழி வெறிகளை ஊட்டி, தார் பூச்சுகளைச் செய்கிறார்கள். சிங்களவராயினும்சரி தமிழர்களாயினும்சரி கனவான்கள், முதலாளிகள்தான் எம் பொது எதிரிகளாக நாம் பாவிக்க வேண்டும் தவிர சிங்களவர் தமிழர் என்ற ரீதியில் எதிரிகளாக இருக்கக் கூடாது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி வடபகுதி அமைப்பாளர் திரு: எம். நடராசா பேசுகையில்கூறியதாவது: 'தமிழ் மக்கள் எம்கட்சி மூலம் தான் தங்கள் கலைகளை, கலாச்சாரங்களை வளர்க்க முடியும். 'ஆங்கில—தமிழ்' வகுப்புவாதக் கட்சிகளை இன்னமும் நம்பினால் மேலும் அழிந்துபோக வேண்டியது தான்.

நல்லூர்க்கிளை கூட்டுச் செயலாளர்களான திருவாளர்கள்சோமசுந்தரம், சடாச்சரம் ஆகியோரும் பேசினர்.

கூட்ட இறுதியில் மந்திரி அவர்களிடம் கலைகள் சம்பந்தமான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

## அரசியல் நிர்ணய சபை:

# 'தமிழர் முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது' - ஜி.ஜி.

## 'எதிர்த்து உரிமை பெறமுடியாது'

— செனட்டர் நீதிராசா

கொழும்பு, சனி

அரசியல் நிர்ணயசபை கூட்டத்தில் தமிழர்கள் கலந்து கொள்வது நல்லது. இதனை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்டால், சிங்கள மக்கள் மத்தியில் ஒரு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தச் செய்யும். நாட்டின் நன்மையைக் கருதி எடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது."

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக நமது நிருபரிடம் நேற்று மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

அரசியல் நிர்ணயசபையில் வழங்கப்படும் என்று கூறப் ச[illegible] இனத்தவர்களினதும் படுவதை வரவேற்கி[illegible]றும் அடிப்படை உரிமைகளும் என்றும் அவர் கூறி[illegible]ர்.

## ஆட்சிமன்றக் குழுவும் ஏற்றது

[illegible]கில இலங்கை தமிழ்க் ஏற்படுத்துமென்றே இவர்

## எதிரி விடுதலை

## மிருசுவில் குடியேற்றத்திட்டம்:

## புகார் பற்றி நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் கட்டப்படும் வீடுகள் பற்றி பெண்கள் செய்துகொண்ட புகார் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் திருமதி சிறிமாவே பண்டாரநாயக்கா எழுதியுள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

அக்குடியேற்றத் திட்டத்தில் பெண்களுக்கெனஉறுதியற்ற சிறிய வீடுகள் கட்டப்படுவதாக பிரதமருக்கும் வீடமைப்பு மந்திரிக்கும் புகார் செய்யப்பட்டது.

வீடமைப்பு மந்திரி திரு. பீட்டர் கெனமனிடமிருந்து கிடைத்த பதிலில் இதுபற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது:

கலாச்சார உதவி மந்திரி திரு. சோமவீரசந்திரசிறி இம் மாதம் 20-ம் தேதி காலை மிருசுவில் பெண்கள் குடியேற்ற திட்டத்திற்கு விஜயம் செய்வார்.

## இன்று அரசியல் நிர்ணய

## சத்தியசாயி சேவா சமித்தி

நல்லூர், சனி

குருபூர்ணிமா அவர்களுடைய பெயரில் அகண்ட நாம பஜனை நேற்றுக்காலை 8 மணியளவில் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ சத்தியபாபாவின் படம் மலர்சூட்டி திறந்து வைக்கப்பட்டது.

அகண்டநாம பஜனையில் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, பதுளை முதலிய இடங்களிலிருந்து பாவா ஸ்ரீ சத்தியா சங்க

## "கலாச்சாரத்தால் ஒன்றுபட்டவர்கள் நாம்"

சங்கானை, சனி

'தமிழ் சிங்கள மக்கள் மதத்தாலும் மொழியாலும் வேறுபட்டவர்களாக இருந்தாலும் கலை, கலாச்சாரத்தால் ஒன்றுபட்டவர்களாக இருக்கின்றோம்' இதனைஇந்த வைபவத்தில் கண்டேன். நாட்டியங்கள் எமது சிங்கள நாட்டியத்தை ஒத்தனவாக உள்ளன' பாடல்கள்எனக்கு புரியாவிட்டாலும் எமது பாடல்களை ஒத்தனவாகவும் காதுக்கு இனியவையாகவும் உள்ளன. இதுபோன்றவைகள் எம் இரு சமூகங்களையும் இணைத்துள்ள இவ்வேளை சிலபிற்போக்கு வாதிகள் எம்மை பிரித்துவைக்கமுயல்கின்றனர். இதில்பொதுமக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்- அப்படியானால்தான் எமதுஐக்கியம் மென்மேலும் வளர்ச்சியடையும்.'

இவ்வாறு கலாச்சார-விவகார உதவி அமைச்சர் திரு சோமவீரசந்திரசிறி வலிகாமம் மேற்கு ப நோ கூ சமாச சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துபேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கானை அரசடிவைரவர் ஆலய முன்றலில் திரு, எஸ் இராசசுந்தரம் தலைமையில் விழா நடைபெற்றது.

கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்த அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 'அரசாங்கத்

[illegible]றுமை மேல்மட்டத்திலிருந்து வந்ததொன்றல்ல, இது கீழ் மட்டத்திலிருந்து உதித்ததொன்றே உண்மைக்கும் சத்தியத்திற்கும் எமது பிரதமர் மதிப்புக் கொடுத்திருக்கும்இவ்வேளையில் எமது ஒற்றுமை மென்மேலும் விருத்தியடையநீங்கள் உதவவேண்டும்.

வட்டுக்கோட்டை எம் பி திரு. ஆ. தியாகராசா பேசுகையில்:

பொருளாதாரம் வளர வேண்டுமானால் எல்லோருடைய உழைப்பும் அவசியம். ஜப்பான் ஜேர்மன் போன்ற மேல்நாடுகள் வளர்ச்சியடையக் காரணம் அந்நாட்டு மக்களின் பெருமுயற்சியேயாகும். எமது பகுதிகளிலுள்ள செல்வந்தர்கள் தங்கள் பணத்தைப் பதுக்கி வைக்காது எமது பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும், அப்போதுதான் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் ஓர்அளவில் தீர்வதுடன் பொருளாதார முன்னேற்றத்தையும் அடைய ஏதுவாகும் என்றார்.

— —

## இன்று

இன்று திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் சிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்ற சிறிய வீடுகள் கட்டப் படுவதாக பிரதமருக்கும் குடியேற்ற திட்டத்திற்கு விஜயம் செய்வார்.

# இன்று அரசியல் நிர்ணய சபைக் கூட்டம்

## காலை 10 முதல் 1 மணி வரை

## வானொலியில் கேட்கலாம்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு றோயல் கனிஷ்ட பாடசாலை 'நவரங்க ஹல' மண்டபத்தில் அரசியல் நிர்ணய சபைக்கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தை முன்னிட்டு கொழும்பின் பிரதான வீதிகள் பலவற்றில் வாகனப் போக்குவரத்து இன்று காலை 9-30 மணி முதல் மாலை 2 மணிவரை தடைசெய்யப்படும்

தேஸ்ரன் வீதி, பிளவர் ரோட், கிறீன்பாத் சந்தியிலிருந்து தேஸ்ரன் வீதி வரை, கேம்பிறிஜ்றோட்ரேஸ்கோஸ் அவனியூ, கோல் பீல்ட் கிறசென்ட் ஆகிய வீதிகள் பகிரங்கப் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ளன

அரசியல் நிர்ணயசபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சகல எதிர்க்கட்சி எம். பி.க்களும் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது தற்போதய மக்கள் பிரதிநிதிகள் சபையை அரசியல் நிர்ணயசபையாக மாற்றக்கோரும் பிரேரணையைப் பிரதமர் ஸ்ரீமாவோ கூட்டத்தில் சமர்ப்பித்துப் பேசுவார்.

நவரங்கஹலவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இன்று காலை 10 மணி தொடக்கம் 1 மணிவரை இலங்கை வானொலி அஞ்சல்செய்யும் இவற்றை தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் கேட்கலாம்

# மாணவனைத் தாக்கிய ஆசிரியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வரணி மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் ஒருவரால் மாணவரொருவர் தாக்கப்பட்டதாக கூறப்பட்ட புகாரைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட ஆசிரியர் விசாரணையின் பின் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இவ்வித்தியாலய அதிபரும், மற்றும் இரு ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

அதிபரையும், மாணவனைத் தாக்கிய ஆசிரியரையும் இடமாற்றம் செய்யும்படி பெற்றோர்களும், பழைய மாணவர்களும் வித்தியாலய வாசலில் சத்தியாக்கிரகம் செய்தனர். இதைத் தொடர்ந்து கல்வி அதிகாரிகள் இச்சம்பவம் பற்றி விசாரணை செய்தனர்.

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி பரமசாமி

சாவகச்சேரியைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்மேஜர் **நல்லதம்பி பரமசாமி** காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினராசாவின் அன்புத் தந்தையும், அருள்சோதியின் மாமனும், தையல்நாயகி ஐயம்பிள்ளை, சிவக்கொழுந்து பொன்னுச்சாமி, தெய்வானைப்பிள்ளை சுப்பிரமணியம், அன்னலட்சுமி சின்னத்துரை, கனகம்மா இரத்தினசபாபதி ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் சாவகச்சேரி மயானத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். 2130

...லம், அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக நமது நிருபரிடம் தேற்று மேற்கண்ட கருத்தை தெரிவித்தார்.

# எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஸ்திரிக்கைப் பெட்டி திருடியதாக தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார். இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டயஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் மகாஹாாட்வயர் ஸ்ரோர்ஸ் மனேஜர் மகாலிங்கத்திற்குச் சொந்தமான ஸ்திரிக்கைப்பெட்டியைத் திருடியதாக செபமாலை செபஸ்தியாம்பிள்ளை மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரி சார்பில் புறக்டர் ஏ அன்ரனி ஆஜரானார்

... ...

# கைத்தொழில் ஆசிரியர் சங்கம்

மருதானை, சனி

அகில இலங்கை கல்விப்பகுதி கைத்தொழில் ஆசிரியர் சங்கத்தின் 25-வது வருடாந்தக்கூட்டம் இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கிறது. மருதானை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் உதவிக்கல்வி மந்திரி திரு. பி. வை. துடாவை கலந்துகொள்ளுவார்.

— —

# தாமதக் கட்டணம் நீக்கப்பட்டது

கோட்டை, சனி

நாட்டின் சகல துறைமுகங்களிலும் உணவுக்கப்பல்களிலிருந்து பொருட்கள் தாமதமின்றி விரைவாக இறக்குமதி செய்யப்பட்டதால் இதுவரை காலமும் தாமதம் காரணமாக இருந்துவந்த தாமதக்கட்டணம் அகற்றப்பட்டுள்ளது

துறைமுகங்களில் இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டதால் கடந்த மே மாத வரை 117000 ரூபா நாளொன்றுக்குத் தாமதக்கட்டணமாக வழங்கப்பட்டுவந்தது. இது பின்னர் துறைமுகங்களில் ஏற்பட்ட துரித வேலையால் படிப்படியாகக் குறைந்துவந்து தற்போது நீக்கப்பட்டுவிட்டது.

கடந்த மாதம் இறக்குமதி ஏற்றுமதி அமைச்சர் துறைமுகத்தில் பொருட்கள் இறக்குமதியில் ஏற்படும் தாமதத்தைக்குறைக்க எடுத்த நடவடிக்கை காரணமாகவே மேற்படி கட்டணம் நீக்கப்பட்டுள்ளது

# ஆட்சிமன்றக் குழுவும் ஏற்றது

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழுவும் தலைவரின் இந்தக் கருத்தைஏற்றுக்கொண்டுள்ளது அரசியல் நிர்ணயசபையாக மாறுவதை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்கமுற்பட்டால் சிங்கள மக்கள் மத்தியில்ஒரு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்துமென்றே இவர்களும் கருதுகிறார்கள் தமிழ் காங்கிரஸ்ஆட்சிமன்றஉறுப்பினர்கள் திருவாளர்கள் வி ஆனந்தசங்கரி, ஆ தியாகராசா, சி அருளம்பலம் ஆகிய மூவரும் கூடி இந்த முடிவை ஆராய்ந்தனர்

## நீதிராசா கருத்து

இதுசம்பந்தமாக செனேட்டர் நீதிராசாவிடம் நமது நிருபர் கேட்டபோது அவர் கூறியதாவது: தமிழர்களின் உரிமைகளை அரசாங்கத்தை எதிர்ப்பதன் மூலம் பெற்றுவிடமுடியாது. கடந்த காலத்தில், அரசாங்கத்தை தமிழர்கள் எதிர்த்து எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை.

அரசியல் நிர்ணயசபையில் சிறுபான்மையினருக்கு ஏதிராக ஏதாவது இடம் பெற்றால் தமிழர்களை கொண்ட தூதுகோஷ்டியொன்று அரசாங்கத்திடம் அவற்றை எடுத்துக்கூறி நிவர்த்தி செய்யலாம்.

அரசியல் நிர்ணயசபை சம்பந்தமாக எடுக்கப்படும் கூட்டப் பிரச்னை உடன் பலன்தராது. இதனால் பலன் கிடைத்தாலும் எவ்வளவு பலன் கிடைக்குமென்று சொல்ல முடியாது.

### சட்ட நடவடிக்கை:

# யூ. என். பி. எடுத்தால் தமிழரசு எடுக்குமாம்

தமிழரசு கட்சி பிரமுகர் ஒருவர் கூறியதாவது: அரசியல் நிர்ணய சபைக்கு எதிராக யூ. என். பி. சட்ட நடவடிக்கை எடுத்தால் தமிழரசு கட்சியும் சட்ட நடவடிக்கை எடுக்கும். தனியாக தமிழரசு கட்சி மட்டும் சட்ட நடவடிக்கை எடுத்தால், சிங்கள மக்கள் மத்தில் தப்பபிப்பிராயம் ஏற்பட்டுவிடும். அரசியல் நிர்ணயசபை பற்றி உடனடியாக தீர்வுகாண முடியாது. அச்சபை செயல் படுவதை பார்த்தே தீர்மானிக்க வேண்டும்.

அரசியல் நிர்ணயசபை பற்றி ஆலோசனை நடத்த தமிழரசு கட்சி சைவமங்கையர் கழகத்தில் கூட்டிய மகாநாட்டில், அரசியல் நிர்ணய சபை கூட்டத்திற்கு செல்வதென்றும், அங்கு நிலைமையை நேரில் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பலர் வற்புறுத்தியதாக தெரிய வருகிறது.

# மரண அறிவித்தல்

## முருகேசு இராசமணி

பளை இத்தாவிலைச் சேர்ந்த **முருகேசு இராசமணி** காலமாகிவிட்டார். இவர் பளை ஸ்ரீ கபே உரிமையாளர் நா. முருகேசுவின் அருமை மனைவியாரும், சு. முத்தையா, மு. அன்னமுத்து அவர்களின் அருமைப் புதல்வியும் மு. இராசநாயகம், மு. குணரத்தினம், மு. துரைசிங்கம் மு. இராசரத்தினம் ஆகியோரின் சகோதரியும் பளை முருகன் கபே உரிமையாளர் வ. நாகலிங்கம், நியூஸ் ஏஜன்ட் வ வெற்றிவேலு ஆகியோரின் மகள் முறையும் செல்வமுத்து முத்துவின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகளுக்காக இன்று (19-7-70) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பளை இத்தாவில் தேனுவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். 2131

...வைக்கப்பட்டது.

அகண்டநாம பஜனையில் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, பதுளை முதலிய இடங்களிலிருந்து பாவா ஸ்ரீ சத்தியா சங்க அங்கத்தவர்கள் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். இறுதியில் மகேஸ்வர பூஜையும் நடைபெற்றது.

...இராசசுந்தரம் தலைமையில் விழா நடைபெற்றது.

கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்த அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 'அரசாங்கத்தின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக உங்கள் தொகுதியாகிய வட்டுக்கோட்டையிலிருந்தே ஒரு தமிழ் மந்திரி எமது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார் இவ் வொற்...

# இன்று

இன்று திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் சிவானந்தர் ஆராதனை வாரம் ஆரம்பமாகிறது- இதனையொட்டி பி.ப 5-30மணிக்கு விசேட ஆராதனை நடைபெறும்.

# கற்குகைகளில் இரகசியகூட்டம்?

## மீண்டும் சேகுவேரா பூச்சாண்டி

பலாங்கொடை, சனி

வன்முறை புரட்சி மூலம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட 'சேகுவேரா' இயக்கம்பம் பரபொட்டுவ என்ற பகுதியில் மிக பிரமாதமாக செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த தேர்தலின்பின்னர் இந்த இயக்கம் மிகவும் தீவிரமடைந்திருப்பதுடன் திருமணமாகாத நூற்றுக் கணக்கான இளைஞர்களும் இதில் அங்கத்தவர்களாக சேர்ந்திருக்கிறார்களாம் இதுமாத்திரமன்றி பாடசாலை மாணவர்களுடன் பௌத்த பிக்குமார்களும் சேர்ந்து செயல்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த இயக்கத்தினர் காடுகளிலுள்ள குகைகளிலும், பாழடைந்த வீடுகளிலும், தமது கூட்டங்களை மிகவும் இரகசியமாக நடத்துகிறார்கள் என்றும் இந்தக் கூட்டங்களில் கலந்து ஆலோசனைகள் கூறுவதற்கு ஒவ்வொருவாரத்திலும்இரு அதிகாரிகள் கொழும்பிலிருந்து வருகிறார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

ஒன்பது அம்சங்களைக் கொண்ட ஒழுங்குவிதிகள் அடங்கிய சிறு புத்தகம் ஒன்று இவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டிருக்கிறதென்றும் இந்தஇயக்கத்தில் சேருகிறவர்கள் இரகசியங்களைக் காப்பாற்றுவதாக சத்தியப்பிரமாணம் செய்தபின்னரே இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் என்றும் சொல்லப்படுகின்றது புத்தகத்தில்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களுடன் பின்வரும் விஷயங்களும் இடுக்கின்றனவாம்.

1. இலங்கை அரசு சம்பந்தமாக இப்பொழுது இருக்கும் கட்சிகள் சரியல்ல.

2. புரட்சிமூலமே நமக்குத்தேவையான அரசாங்கத்தை நிறுவ முடியும்,

3. எந்த அரசாலும் இளைஞர்களின் தொழிற் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க இயலாது.

கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுப்போனவர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்களாம்.

— —

# பல்கலைக்கழகம் விஸ்தரிக்கப்படும்

கோட்டை, சனி

கொழும்புப் பல்கலைக்கழகம் விஸ்தரிக்கப்பட்டுமாணவர்களுக்கு விடுதிவசதிகள் முதலியன அளிக்கப்பட்டுள்ளன.

முன்னைய குதிரைப்பந்தய திடலில் 50 ஏக்கர் நிலப்பரப்பு இந்த விஸ்தரிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படவிருக்கிறது. பல்கலைக்கழகக் கட்டிட கலைஞர் ஒருவரை நியமிப்பதற்குத் தேசிய உயர் கல்விச்சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இக் கட்டிடக்கலை நிபுணரே மேற்படி பல்கலைக்கழக விஸ்தரிப்பு வேலைகளைத் திட்டமிடுவார்.

இதற்கிடையில் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் சில வசதியான வீடுகளை வாடகைக்கெடுத்து மாணவர்களுக்கு தற்காலிக இடவசதி வழங்குவதென பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் பி. ஏ. அபேவிக்கிரம தீர்மானித்துள்ளார்.

மாணவர் அமைதியின்மைக்கு இடவசதியின்மையும் ஒரு காரணமாகும் என பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். மேற்படி விஸ்தரிப்பு திட்டத்தால் இப் பிரச்னை தீர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உதவி மந்திரிக்கு வரவேற்பு

கொடிகாமம், ஞாயிறு

கலாச்சார உதவி அமைச்சர் திரு சோமவீர சந்திரசிறிக்கு இம்மாதம் 20-ம் திகதி காலை மிருசுவில்சுதந்திரக்கட்சிக்கிளை வரவேற்பளிக்கும். அன்று மாலை கைதடி சுதந்திரக்கட்சிக் கிளையும் வரவேற்பு அளிக்கும்.

வரணியில் சுதந்திரக்கட்சிக் கிளை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சுதந்திரக்கட்சிக் கிளை அமைப்பாளர் திரு எம் நடராசா இக்கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்.

### ரயில் பஸ் விபத்து

# விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும்

கோட்டை, சனி

பாலாவிக்கு அருகில் நடந்த ரயில் பஸ் கோரவிபத்து சம்பந்தமாக விசாரணை செய்ய விசாரணைக் கமிஷன் ஒன்றை போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தன நியமிக்கவிருக்கிறார்.

புத்தளத்துக்கும் பாலாவிக்குமிடையில் முள்வேலி என்ற புகையிரதக் கடவையில் நடந்த கோரவிபத்தில் பஸ்சில் பிரயாணம் செய்த 14 பேர் கொலையுண்டது தெரிந்ததே.

இந்த விபத்துப்பற்றிவிசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

4 பரப்புக்காணி மானிப்பாய் அரசாங்க டிஸ்பென்சறிக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கா. மாணிக்கவாசகர், மே/பா திருமதி கா.கார்த்திகேசு, மானிப்பாய் தெற்கு: மானிப்பாய். 2170

### தேவை

கோயிற் பரிகாரகர்!

கொழும்பிலுள்ள ஓர் பிரபல கோயிலுக்கு அனுபவமுள்ள பிராமணப் பரிகாரகர் தேவை. விவாகமாகாதவர் விரும்பத்தக்கது. நேர்முகப்பரீட்சை வேலை சம்பளம் நிர்ணயிக்கப்படும். 30-7-70க்கு முன் ஊர்க் கிராமசேவையாளரின் நற்சாட்சிப் பத்திரத்துடன் விளம்பர இலக்கம் 3198, 6, கிளெனெபர் பிளேஸ், கொழும்பு-4 என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 3198

### நன்றி நவிலல்

9-7-70 வியாழக்கிழமை திரு. சிவநாதன் — செல்வி கமலாசனி அவர்களுக்கு நடைபெற்ற திருமண வைபவத்தில் அன்புடன் கலந்துகொண்டு ஆசி கூறியவர்களுக்கும் அன்பளிப்பு செய்தவர்களுக்கும் மற்றும் உறவினர் நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தனித்தனியே நன்றிகூறஇயலாததையிட்டு வருந்துகின்றோம். க. பரராசசிங்கமும், பாரியாரும். 3199

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## கேள்வி விளம்பரம்

### மேல்பற்று தெற்கு கிராமசபை

1970-ம் ஆண்டு ஆடி மாதம் 30-ந் திகதி நண்பகல் வரை ''பெரியமடு வண்ணான்குளம் ரோட்டு வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பணமாக ரூபா 100/- செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் கேள்வி தயாரிக்கப்பட வேண்டும். பத்திரப்பணம் ரூபா 25/-ம் செலுத்தப்படவேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்வி விண்ணப்பிக்கும் அதே நேரத்தில் வவுனியா உ. உ. ஆணையாளர் அவர்கட்கும் இதன் பிரதியொன்று பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். 29-7-70 திகதி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். விபரமெதையும் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சி. உ. செல்லத்துரை,
கி. ச. அக்கிராசனர்
ஜே. பி.

கி. ச. அலுவலகம்,
நயினமடு,
நெடுங்கேணி,
15-7-70. 2373

கொடிகாமம், சனி

மிருசுவில் வடக்கில்உள்ள மன்னன்குறிச்சி கந்தசுவாமி கோயில் தெரு சிரமதான மூலம் திருத்தப்பட்டது. கிராம சபை அங்கத்தவர் திரு செல்லையா தலைமையில் 25 தொண்டர்கள் இச்சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

## கேள்வி விளம்பரம்

### கிராமசபை - புங்குடுதீவு

1. மின்னியன் வாய்க்கால் ரோட்.
2. பிள்ளையார் கோவில் ரோட்.
3. பல்லதீவுக் கிணறு.

புங்குடுதீவு கிராமசபை அக்கிராசனர் அவர்களால் 1970-ம் ஆண்டு ஆடி மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணி வரை ஷெ வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து ''சீல்'' வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 35/- (முப்பதைந்து) கட்டி 1970-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் புங்குடுதீவு கிராமசபையில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரத்துக்குக் கட்டிய பணத்தில் ரூபா 5/- (ஐந்து) திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மேலும் விபரங்களை புங்குடுதீவு கிராமசபை அலுவலகத்திலும் உள்ளூராட்சி உதவி அதிபர், யாழ்ப்பாணம் அவர்கள் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

கா. மதியாபரணம்,
அக்கிராசனர்.

கிராமசபை அலுவலகம்,
புங்குடுதீவு,
16-7-70. 2372

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 19—7—70

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-10 இடைவேளை சங்கீதம், 7-30 திரைகானம், 7-45 நினைவுக்குறிப்பு, 8-00 பாட்டு, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 46 மீ.

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு6-15 இசைப்பயிற்சி, 6-25 இடைவேளை சங்கீதம்,

## நாணட்டானில் நடைபெறவிருக்கும் 2 நாள் விளையாட்டுப் போட்டிகள்

முசலி, சனி

முசலிக் காரியாதிகாரி பிரிவின் கீழுள்ள பதினான்கு கிராமசேவையாளர் பகுதிகளையும் சேர்ந்த மெய்வல்லுனர் போட்டி யொன்று இம்மாதம் 23-ம், 24-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டிக்கு பிரதம அதிதியாக மன்னார்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் கலந்துகொள்வார். மன்னார் எம்,. பி. திரு. வி. ஏ. அழகக்கோன் பரிசுகளை வழங்குவார். நாணட்டான் கிராமசபை மத்திய மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியின் சிறப்பு நிகழ்ச்சியாக இரட்டை மாட்டு வண்டிச் சவாரியும். இருபத்தைந்து மைல் ஸ்டாண்டர் சைக்கிள் ஓட்டமும் நடைபெறவிருக்கிறது.

முசலிக் காரியாதிகாரி திரு வை சொக்கலிங்கமும், முசலிக்காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு எம். ஏ. தியாகராஜாவும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

### உற்சவம்

புங்குடுதீவு சனி

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் வருகிறமாதம் 7ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது: தொடர்ந்து 10 நாட்கள்வரை உற்சவம் நிகழும்.

## வள்ளுவர் இல்லம் சாம்பியன்

உரும்பராய், சனி

''நல்ல இயற்கை வளம் பொருந்திய சிவந்தமண் உள்ள இடம் வவனிக்குள பிரதேசம். இந்தச் சிவந்த மண்ணைப் பண்படுத்தி நீர்ப்பாய்ச்சி நல்ல பச்சைப் பயிர்களை உண்டாக்கி உலகத்தைக் காப்பாற்றுகின்றார்கள் உழவர்கள். உழவர்களினதும் உத்தியோகத்தர்களினதும் பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்கு இப்பகுதி தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர்கள் செய்யும்சேவை பாராட்டக்கூடியது''

வவனிக்குளம் இரண்டாம் யூனிற் அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கிய வவனிக்குள நீர்ப்பாசன இலாகாப் பொறியலாளர் திரு. கே. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு தெரி[illegible]தார்.

தலை[illegible] ஆசிரியர் திரு. சி. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில், வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை பிரத[illegible]ருந்[illegible] கலந்து[illegible]கொண்ட வட்டார வித்தியாதிகாரி திரு. வ. க.

## சம்பந்தர் இல்லம் முதலிடம்

நல்லூர், சனி

செங்குந்த இந்துக்கல்லூரி இல்ல விளையாட்டுப்போட்டி நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சம்பந்தர் இல்லம் 121 புள்ளிகளையும், சுந்தரர் இல்லம் 106 புள்ளிகளையும், மாணிக்கவாசகர் இல்லம் 97 புள்ளிகளையும், நாவுக்கரசர் இல்லம் 87 புள்ளிகளையும் பெற்று சம்பந்தர் இல்லம் 'சம்பியன்' வெள்ளிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

உயரப் பாய்தல் போட்டியில் எஸ். மகேஸ்வரன் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார். போட்டியில் உயர்தரப் பிரிவில் எஸ். நகுலேஸ்வரி, எஸ் யோகேஸ்வரி சம்பியன் வெள்ளிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

## உதவி அமைச்சரை வரவேற்பர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வந்திருக்கும் கலாச்சார துணை அமைச்சர் திரு சோமவீரசந்திரசிறிக்கு இன்றுவட்டுக்கோட்டையில் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. சிவன்கோவிலடியில் நிகழும் இவ்வரவேற்பின் போது தர்மபுத்திரர் என்ற நாட்டுக்கூத்தின் சிலபகுதிகள் நடித்துக்காட்டப்படுமாம்.

நாளை

உதவி அமைச்சர் சந்திரசிறீயை ஸ்ரீலங்கா இசைப் பட்டதாரிகள் சங்கம் நாளை வரவேற்கவிருக்கிறது.

நாளை பிற்பகல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இவ்வரவேற்பில் வேலையற்றிருக்கும் இசைப்பட்டதாரிகளுக்கு வேலைவழங்குவதற்கு ஏற்பாடு செய்[illegible] வேண்டுமென்று கோரு[illegible] மகஜரை சங்கம் அமைச்சரிடம் கையளிக்கும்.

## அனுதாபத்துடன் ஆஸ்பத்திரியில்

# 'ஆசிரிய இடமாற்றம் அவசியமே ஆனால்இவர்களுக்குசகாயப்பணம்வழங்குக'

### — ஜாதிக குரு சங்கச் செயலாளர்

கொள்ளுப்பிட்டி.சனி

''ஆசிரிய சேவையில் இடமாற்றம் முக்கியமானது. சம்பளம், குடும்பக்கஷ்டம் இடநிலை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு இதை செயற்படுத்த வேண்டும்'' கஷ்டமான பிரதேசத்திற்கு மாற்றப்பட்டவர் திரும்பி சொந்த இடத்துக்கு வரும்வரை அதேதியானத்தில் இருப்பார் அத்தகைய இடங்களுக்கு அனுப்பப்படும் ஆசிரியர்களுக்கு வசதிகள்பலசெய்து கொடுப்பதன் மூலம் பிரச்னைதீரலாம் பத்துச்சதவீதம் தொடங்கி நூறு சதவீதம் வரை சகாயப்பணம் வழங்கியும், இலவசவீடு வைத்தியவசதி அளித்தும், இவர்களின் கஷ்டத்தை நீக்கலாம்.

கொள்ளுப்பிட்டியில்நடைபெற்ற அகிலஇலங்கை ஆசிரியர்சங்கங்களின்ஆலோசனைச்சம்மேளனக் கூட்டத்தில் பேசிய ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கச் செயலாளர் திரு. எல். ஆரியவன்ஸா இவ்வாறு கூறினார் சங்கத் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமைவகித்தார்.

திரு. எல். ஆரியவன்ஸா மேலும் பேசியதாவது:- மிகவும் பிற்போக்கான இடங்களைச் சீர்ப்படுத்த தலத்தாபனங்கள் முயல வேண்டும் அங்குள்ள பிள்ளைகளின் கல்வியை வளர்க்க தொழிற்சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் சகலருக்கும் பொறுப்புணர்ந்து சேவை செய்ய ஆசிரியர்கள் அனைவரும் தயாராக இருக்கவேண்டும்.

மாற்றங்கள் மாவட்ட சேவை அகில இலங்கை சேவை அடிப்படையில் நிகழ்வது பொருத்தமாகும் படிப்படியாக மாற்றங்கள் குறைந்து மாவட்ட சேவையில் ஆசிரியர்கள் தொடர்ந்து கடைமையாற்றும் நிலைமை ஏற்படும் இதனால் மாவட்டங்களின் கல்விநிலை வளர்ந்து வரும்.

அகில இலங்கை மாற்றச் சேவையில் தெரிவுபெறும் ஆசிரியர்கள் எங்கும் மாற்றம்பெற ஆயத்தமாகஇருக்க வேண்டும். புதிய நியமனங்களாலும், ஆசிரிய கலாசாலைகளிலிருந்து புறப்படுவோராலும், கஷ்டமான பிரதேசத்தை விரும்புவோராலும், அப்பிரதேசத்துக்குச் செல்லத்தூண்டுதல்செய்யப்படும் வழிவகைகளாலும் அகில இலங்கைமாற்றங்களை நடைமுறைப்படுத்தலாம்.

கஷ்டமான இடத்தில் இரண்டாண்டுசேவைசெய்து திரும்பவும் கஷ்டமானபாடசாலைகளில் நியமனம்பெறும் அதிபருக்கும், உதவி ஆசிரியர்களுக்கும் நிரந்தர சகாயப்பணம் அளிக்கவும் வசதி செய்யவேண்டும். ஆசிரியத் தம்பதிகள் சென்றால் அவர்களின் பிள்ளைகளுக்கு மத்திய மகாவித்தியாலயத்தில் படிக்கவசதியும். குடியிருப்பு வசதியும் செய்துகொடுக்க வேண்டும்.

45 வயதுக்குட்பட்டவர்கள் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு கஷ்டமான பாடசாலையில் கடமையாற்றுதல் வேண்டும். வைத்திய சாட்சிப்பத்திரம் அரசாங்கவைத்தியரால் வழங்கப்படுவதே ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். கணவன்மார் வேலை செய்யும்இடத்துக்கு இயன்ற வரை மனைவிமாரை மாற்ற வேண்டும். இளம்பெண்கள் வீட்டுவசதி உள்ள இடங்களுக்கு மாற்றப்படவேண்டும் ஒத்துமாறுதல் ஒரே தகுதி பெற்ற ஆசிரியர்களிடையே நடைபெறலாம். ஒரு மாத முன்னறிவித்தலில் பிரயாணச் செலவுடன் மாற்றங்கள் நிகழலாம். மத்தியமாற்றச் சபையில் உதவிக் கல்வி மந்திரி, கல்வி அதிகாரிகள், ஆசிரிய தொழிற்சங்கப்பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும், மாவட்டங்களுக்கிடையே நிறுவப்படும் மாற்றச் சபையில் வித்தியாதிபதியும், கல்வி அதிகாரிகளும், ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும், மாற்றச்சபைகள் வருடத்துக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும்.

இச்சம்மேளனக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கம் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கம், அகில

யன அங்கம்வகித்தன.

நீண்டகாலமாக இருந்து வந்த மாற்றப்பிரச்னைக்குக் கல்வி மந்திரி தொழிற் சங்கத்துக்குக்கொடுத்த முக்கியத்துவத்தால் தீர்வுகாணப்பட்ட நிலைமை குறித்து சம்மேளனம் திருப்தியடைந்துள்ளது. (உரு. நிரு.)

## ஈளைகள் நிறுவ அழைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட பகுதியில் சுதந்திரக் கட்சிக் கிளை நிறுவும்படி பல இடங்களிலிருந்து அழைப்பு வந்திருப்பதாக சுதந்திரக் கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு: எம் நடராசா தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கலாச்சார உதவி அமைச்சர் இம்மாதம் 25ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பாரென்றும்

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

### தேடாமல் கிடந்த மரங்கள்

மாதன்கேணி-பருத்தித்துறை பிரதான வீதியில் குடாரப்புக்கு அண்மையில் அநாதரவாய்க் கிடந்த 500 ரூபா பெறுமதியுள்ள 4 பாலைமரங்களையும் ஒரு ஒதியமரத்தையும் நாகர் கோவில் கிராமசேவையாளர் கைப்பற்றினார். விரைவில் இவை ஏலத்தில் விடப்படுமெனத் தெரிகிறது.

0 0 0

### தமிழரசு வா. மு. நிர்வாகிகள்

கிளிநொச்சித் தொகுதி பச்சிலைப்பள்ளிப் பகுதி தமிழரசு வாலிப முன்னணியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் போஷகர் திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற போது கீழ்க் கண்டோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: பொ. திருஞானம், உபதலைவர்கள்: செ.செல்லத்துரை, ஆ. காசித்தம்பி, செயலாளர்: இரா நாகேந்திரம், உப செயலாளர்கள்: மா. சிவானந்தராசா, சி.சச்சிதானந்தம் பொருளாளர்: பொ. சுப்பிரமணியம்.

நிர்வாகசபை அங்கத்தினராக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இருவர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

### நடவடிக்கை இல்லையாம்

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை கடந்த பத்துத் தினங்களாக மூடப்பட்டிருப்பது பற்றி கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் தந்தி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2வது வாரம்!
ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி நடித்த
மாவீரன் ஜெயசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்த

# மாவீரன் ஜெயசீலன்



வின்ஸர் — யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்

பத்மினி - ராகினி - தங்கவேலு

நடித்த

# உத்தம புத்திரன்

(புதிய கொப்பி)



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு)   பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ வி.எம்.ராஜன்

★ சௌகார்ஜானகி

★ நாகேஷ் ★ குமாரிசச்சு

சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்

★ கே. பி. சுந்தராம்பாள்

★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன்   சங்கீதம் K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-25 இடைவேளை சங்கீதம், 7-00 வேல்விழா — அஞ்சல், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 தொடக்கம் 12-00 மணி வரை வேல் விழா அஞ்சல்.

— —

## தமிழர் எழுச்சிவிழா

பூநகரி, சனி

பூநகரி த. அரசுக்கட்சி வாலிப முன்னணியினரால் பூநகரிகோட்டைமைதானத்தில் தமிழர் எழுச்சிவிழா வொன்று விரைவில் கொண்டாடப்பட இருக்கின்றதென்றும் இவ்விழாவில் வடக்கு-கிழக்கு த. அ. கட்சி எம். பி. க்கள் அனைவரும் மற்றும் த. அ. கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களும் கலந்து கொள்வார்களென்றும் இவ்விழாவில் ஐந்துமைல் நீளமான ஊர்வலமும் நடைபெற இருப்பதாகவும் தெரிய வருகிறது.


வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30 மணி

A V M ராஜன்-ஜெயலலிதா நடித்த

மேஜர் சந்திரகாந்



ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30 மணி

போயா, பிரிபோயா 2-30

எம் ஜி. ஆர். — சிவாஜி நடித்த

கூண்டுக்கிளி



MANOHARA
JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p m

Poya-Prepoya 10-30 a.m

Terry Moore,
Ben Johnson
in
MIGHTY JOE YOUNG
(Color)



REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 P.M.

Poya, Pre-poya 10.30 a.m.

Glenn Ford,
Carolyn Jones
in
HEAVEN WITH A GUN


தலைமையாசிரியர் திரு. சி. சுப்பையா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில், வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டார வித்தியாதிகாரி திரு. வ. க. ஈஸ்வரபாதம் வழங்கினுர்.

வள்ளுவர் இல்லம் 248 புள்ளிகளையும், நாவலர் இல்லம் 153 புள்ளிகளையும் பெற்றதால் சாம்பியன் கிண்ணம் வள்ளுவர் இல்லத்துக்கு கிடைக்கப்பெற்றது.

— —

## 'குறத்தி நடனம்' முதலிடம்

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் இசை நடனப் போட்டிகளில் வல்வெட்டித்துறை சிவகுருநாத வித்தியாசாலை மாணவர்களால் நடாத்தப்பட்ட "குறத்தி நடனம்" மிகச் சிறந்த கலை நிகழ்ச்சியாய் தெரிவு செய்யப்பட்டு பரிசுடன் பாராட்டையும் பெற்றது. இந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்து அதனைக் கற்பித்து அரங்கேற்றிய நடன ஆசிரியர் திரு. எஸ். எஸ். சுகுமாரனின் திறமை பலராலும் பாராட்டப்பட்டது.

— —

## நடப்புவருட உத்தியோகத்தர்கள்

கல்வலை, திரு. ஐ. குமாரசுவாமி இல்லத்தில் திரு. குமாரசுவாமி காப்பாளராகக் கொண்ட நாம் இலங்கையர் இயக்கம் உருவாக்கப்பட்டது.

தலைவர் தமது தொடக்கவுரையில் இந்த இயக்கம் ஆரம்பமாவதற்கான காரணங்களைச் தேசிய பொருளாதார வளர்ச்சி, தேசிய ஒருமைப்பாடு, சமுதாய, சமத்துவம் ஆகிய துறைகளில் உழைப்பதே நாம் இலங்கையர் இயககத்தின் நோக்கமாகும் என்ளுர்.

நாம் இலங்கையர் இயக்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கு. விநோதன், உபதலைவர் சி. சிவஞானம், இரா சிவசுப்பிரமணியம், செயலாளர் சி. சண்முகவடிவேல், உபசெயலாளர் அா. சண்முகநாதன், பொருளாளர் சு. இராசரத்தினம், உப பொருளாளர் நா. இலட்சுமிகாந்தன், 9 பேரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

மகஜரை சங்கம் அமைச்சரிடம் கையளிக்கும்.

— —

## அடிகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

பூநகரி, சனி

பூநகரி மட்டுவில் நாட்டைச் சேர்ந்த யோகராசா என்பவர் பலத்த அடிகாயங்களுடன் பூநகரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ்பத்திரிகு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பலமணி நேரம் அறிவிழந்த நிலையில் காணத்பட்டதால் யாழ் ஆஸ்பத்திரிக்கு இவர் அனுப்பிவைக்கப்பட்டார். இரத்தம்தோய்ந்த சேட் ஒன்றும் கிராம சேவையாளர் திரு. எஸ். தியாகராசாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணை தொடர்கிறது.

— —

## ஊர்காவற்றுறைக்கு மின்சாரம்

அல்லைப்பிட்டி, சனி

ஊர்காவற்றுறைப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு எதிர்வரும் செப்டம்பர்மாத பிற்பகுதியில் மின்சாரவசதி கிடைக்கவிருப்பதாகத் தெரிய வருகிறது. காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்குக் கடல் மூலம் மின்சாரம் கொண்டுவருவதற்கான கேபிள்கள் தற்போது வந்து விட்டன. இதுவரை இதனுல் தான் தாமத மேற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. ஊர்காவற்றுறைக்கு மின்சாரம் கிடைத்த பின்னர் தான் வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுமெனத் தெரிகிறது.

— —

## இரு கிராம சேவையாளர்

முசலி, சனி

மன்னுர் மாவட்ட அரசாங்க அதிபரின் கீழுள்ள பதில் தற்காலிக கிராம சேவையாளர்களாகிய எஸ். எம். பெர்னன்டோ, என். எம். நீக்கிலாப்பிள்ளை ஆகிய இரு கிராமசேவையாளர்களும் தற்பொழுது நிரந்தர சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் பெரியமுறிப்பு, நாணுட்டான் ஆகிய பகுதிகளுக்கு கிராமசேவையாளராகக் கடமைபுரிகின்றனர்.

நடராசா தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கலாச்சார உதவி அமைச்சர் இம்மாதம் 25 ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பாரென்றும் வட பகுதியிலுள்ள சுதந்திரக்கட்சிக்கிளைகளுக்கு அவர் விஜயம் செய்வாரென்றும் திரு நடராசா தெரிவித்தார்

தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் வாலிபர்களே சுதந்திரக்கட்சிக்கிளைகள் நிறுவுவதில் ஆர்வம் காட்டுவதாகவும் அவர் கூறினுர்.

வேண்டும், மாற்றச்சபைகள் வருடத்துக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும்.

இச்சம்மேளனக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கம் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கம், அகில இலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்கம், அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கம், தேசீய ஆசிரிய சங்கம், ஸ்ரீலங்கா ஜாதிக பிரத்தியேக ஆசிரியர் சங்கம் தேசீய பிரத்தியேக ஆசிரிய சங்கம், உயர்தரப் பயிற்சி பெற்ற ஆசிரிய சங்கம் ஆகி

துத் தினங்களாக மூடப்பட்டிருப்பது பற்றி கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கும் பெற்ருேர் ஆசிரியர் சங்கம் தந்தி மூலம் அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம் மேற்குறித்த பாடசாலையில் கல்வி போதித்து வந்த ஒரேயொரு ஆசிரியர் சுகவீனமுற்றிருப்பதால் பாடசாலை மூடப்பட்டிருக்கிறது.


தமிழ், ஆங்கில மொழிகளில்

# அச்சு வேலை எதுவானுலும்

எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

- ✶ கடிதத் தலைப்புகள்
- ✶ அறிமுக அட்டைகள்
- ✶ பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
- ✶ புத்தகம் கட்டுதல்
- ✶ புதியவகைப் பற்றுசீட்டுப்புத்தகங்கள்
- ✶ பெரிய பதிவுப் புத்தகம்
- ✶ கோடடித்தல்

ஆதியன.

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறுர்கள்.

சிறந்த சேவையே   எமது நோக்கம்

## ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)

தொலைபேசி: 389   த. பெ. எண்: 49,

63, சிவன்கோவில் மேற்கு வீதி,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காஸிய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு

# ஐ. நா. முயற்சிகளுக்கு பூரண ஆதரவுகொடுக்க முடிவு

## நாஸரின் சோவியத் விஜயத்தின் பலன்

மாஸ்கோ, ஜூலை.18

மேற்காஸியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஐ.நா.சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு அளிப்பதென்று சோவியத் யூனியனும் ஐக்கிய அரபுக் குடியரசும் இணக்கம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றன.

ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் கேணல் நாஸர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்ததையொட்டி வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டது. ஐக்கிய அரசுக் குடியரசு தனது ஆதிபத்திய உரிமைகளுக்காக நடத்திவரும்போராட்டங்களுக்கு ஆதரவு தொடர்ந்து அளிப்பதென்று சோவியத் யூனியன் உறுதியளித்திருக்கின்றது. மேற்காஸியநெருக்கடியைத் தீர்ப்பதற்கான ராஜதந்திர முயற்சிகளைத் தொடர்ந்து நடத்துவதென்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைக் குறைகூறுது இந்த அறிக்கையில் தவிர்க்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ஐக்கிய அரபுக் குடியரசு மீது நடத்திவரும் தாக்குதல்களை நிறுத்தவேண்டும் என்றும், ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டும் என்றும் அறிக்கை வலியுறுத்துகின்றது.

### இஸ்ரேலிய பிரதமர்

சோவியத் யூனியனின் மேற்காஸிய கொள்கையை இஸ்ரேலிய பிரதம மந்திரி திருமதி கோல்டா மெய்யரும் வெளிநாட்டு அமைச்சர் திரு அபாஈபானும் கண்டித்திருக்கின்றன.

சோவியத் யூனியன் உண்மையாகவே மேற்காஸியாவில் அமைதி யேற்படுவதை விரும்பவில்லையென்று திரு ஈபான் தெரிவித்துள்ளார்.

திருமதி கோல்டா மெயர் இதுபற்றி கருத்து வெளியிடுகையில் ரஷ்யார்கள்தான் உலகத்தில் பெரிய முதலாளித்துவ வாதிகள் என்று குற்றஞ் சாட்டினார். மேற்காஸியாவிலுள்ள எண்ணெய், நிலம் அதிகாரம் ஆகியவற்றில் அவர்கள் பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

சோவியத் யூனியனுடன் நேரடியாக மோதிக்கொள்வதற்கும்கூட இஸ்ரேலிய படைகள் தயாராய் இருப்பதாக இஸ்ரேலிய ராணுவத் தளபதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

## தென் வியட்னும் தூதுவர் எதிர்ப்பு

புதுடில்லி. ஜூலை 18

புதுடில்லியிலுள்ள தென் வியட்னும் தூதுவர் சைகோனுக்குத் திரும்பிச்சென்றிருக்கிறார். தென்வியட்னும் புரட்சி அரசின் வெளிநாட்டு அமைச்சர் திருமதி பின் இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதின் நோக்கமாக அவர் தாயகத்துக்குத் திரும்பிப் போவதாகக் கூறப்படுகின்றது. திரு பின் இலங்கைக்கும் விஜயம் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## பதவி ரத்து

மட்டுவில், சனி

மட்டுவில் வடக்கு 4-ம் வட்டார கிராமசபை உறுப்பினர் சில மாதங்கள் தொடர்ந்து கிராமசபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்கத் தவறியதால் அவரது அங்கத்தவர் பதவி ரத்துச் செய்யப்பட்டது.

இதற்கான இடைத் தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது. தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சி ரீதியில் அபேட்சகர்கள் நிறுத்தப்படவிருக்கின்றனர்.

## 65,000 கிணறுகள்

திருச்சி, ஜூலை 18

'பூமிக்கு அடியில் உள்ள நீர்வளத்தை பயன்படுத்துவதற்காக தமிழகம்முழுதும் 65 ஆயிரம் குழாய் கிணறுகள் தோண்டுவதென அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இப்பணியைக் கவனிக்க அரசாங்கம் ஒரு கம்பனியை நிறுவும்.

இத்தகவலை விவசாய அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

மாணவர்கள்

## 'ஆசிரியர்களின் பொறுமையை சோதிக்க கூடாது'

மட்டுவில், சனி

''கல்வியிலேயே தமது கவனத்தைச் செலுத்தி, விடாமுயற்சியுடன் முன்னேற்றப் பாதையில் சென்று விரைந்துகொண்டிருக்கும் எந்த ஒரு மாணவனும் தனது வாழ்க்கையிலே தோல்வி என்று ஒன்றைச் சந்திக்கவோ, அல்லது விரக்தி மனப்பான்மை ஏற்படவோ முடியாது. அப்படியான மாணவர்களின் விடாமுயற்சியும், ஒத்துழைப்பும்தான் அவர்கள் வித்தை கற்க கலைக்கோவிலான கல்லூரியையும்உயரச்சியும் புகழும் அடையச் செய்யமுடியும்.''

இவ்வாறு சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு. மு வைத்திலிங்கத்திற்கு மேற்படி கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தின்போது விருந்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய திரு. வைத்திலிங்கம் கூறினார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் தன்னலமற்ற கொள்கையும் பொது நோக்கு, இரக்க சிந்தை, இத்தனையும் மாணவர் சமுதாயத்தின் அணிகலன்களாக அமையவேண்டும் தவிர, தமக்கு கல்வியறிவை ஊட்டும் ஆசிரியர்களது பொறுமையை சோதிக்கும் வகையில் நடந்துகொள்வதையே தமது பொழுது போக்காகக் கொண்டுள்ள மனப்பான்மையை ஒரு காலும் மாணவர் தமது மனதில் குடியேற இடமளிக்கக்கூடாது.

சலியாத உழைப்பும், நேர்மையான போக்கும் மனோ திடமும் பொறுமையின் ... [illegible] ... விளங்கும் மாணவர்கள்தான் தமது ...

# 'மற்றைய சமயத்தவரின் உற்சாகம் எம்மிடம் இல்லை'

## சிலாபம் சைவ மகாசபை விழாவில் கவலை

சிலாபம், சனி

''நமது சமயத்தை வளர்க்க நம்மவர்கள் முன்வர வேண்டும்மற்றைய சமயத்தவர் களிடத்தில் காணப்படும்உற்சாகம்நமது சமயத்தவர் களிடத்தில் காணப்படுவதில்லை, எமது சமயத்தை விருத்தி செய்வதற்கும் நமது சபையை வளர்ப்பதற்கும் சிலாபம் வாழ் சைவ மக்கள் முன்வரவேண்டும், ஒத்துழைக்க வேண்டும்''.

இவ்வாறு சிலாபம் சைவ மகாசபை ஆண்டு விழா சிலாபம் பௌத்த மண்டபத்தில் நடைபெற்றபோது தலைவர் திரு. மு. நடராசா கூறினார்.

திரு. நடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது சமயம்யாதென வினவின் இந்து சமயமென அனேகமானோர் விடை கூறுகின்றார்கள். இது பிழை இந்துநதிக்கரைக்குஇல்பால் தோன்றிய எல்லாச் சமயங்களையும்இந்து சமயமென்றே கூறுவார்கள் எமது சமயம் சிவசமயமாகையால் சைவ சமயமென்றே கூறுதல் வேண்டும்.

திரு. வீ. வேலாயுதன் பேசுகையில் சைவசித்தாந்தம் தமிழரின் சொந்தச் சொத்துஇதனைப்படித்தறிய வேண்டியது சைவர்களாகிய எமது கடமை தாய்மார்கள் சமயவளர்ச்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். தங்கள் குழந்தைகளை காலையும் மாலையும் இறை வணக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்றுகேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் சபையின் நடப்பு வருட அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் எஸ். குணரத்தினம் (சினிமாஸ் அதிபர்) பேராசிரியர் டாக்டர், ஏ. சின்னத்தம்பி செனட்டர் ரி. நீதிராசா,

தலைவர்: மு. நடராசா

துணைத்தலைவர்: பொ. செல்வரத்தினம், அ. சந்திரமோகன். செயலாளர்: வீ. வேலாயுதன். துணைச் செயலாளர்: மு. சபாநாதன் பொருளாளர்: சி. இராசேஸ்வரன். துணைப்பொருளாளர் தெ. கதிர்காமத்தம்பி

செயற்குழு உறுப்பினர்களாக இரா. குருசாமி, க. வேலாயுதபிள்ளை செ. அரியரத்தினம் இ. ஐயாத்துரை, இரா. சதாசிவம். மு. குழந்தைவேலு, லெ. பாலசுந்தரம், ஐ. கார்த்திகேசு ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 'இளைஞரின் முயற்சிக்கு ஆதரவு நல்க வேண்டும்'

சுழிபுரம், சனி

'இளைஞர்களால் எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் பெற்றோர் ஊக்கமும் உதவியும் அளிக்க வேண்டும். இளைஞர்களின் வருங்காலம் சிறப்புடன் அமைய ஒவ்வொருவரும் தொழிற்கல்வி கற்க வேண்டும். எமது பகுதிகளில் சிறு,சிறு தொழில் வாய்ப்பு நிலையங்களை நிறுவுவதன் மூலம் பலர் பயனடையலாம்'

இவ்வாறு வட்டுக்கோட்டை எம் பி. திரு. ஆ. தியாகராசா கூறினார் வடலியடைப்பு சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினரின் 21-வது ஆண்டு விழாவில் திரு. தியாகராசா கலந்துகொண்டு பேசினார்,

வழக்கறிஞர் க. சோமஸ்கந்தன் தலைமையில் நடைபெற்றவிழாவில் திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், 'உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் பாரிசில் கூடி, தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில், தமிழரின் பாரம் பரியத்தை விளக்கும் க விழாவை இங்கு நடத்துவதையிட்டு பெருமையடைகிறோம்' என்று கூறினார்.

## தீவுப்பகுதி ஆசிரியர்கள் கல்வியில் அலட்சியமாம்

### அமைச்சருக்கு எம். பி. புகார்

அல்லைப்பிட்டி. சனி

''தீவுப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் கூடுதலான கவனமெடுத்துக் கல்வி கற்பிக்காததினாலும் கூடுதலாக லீவு எடுப்பதனாலும் இப்பகுதி மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றமில்லாதவர்களாக விளங்குகின்றார்கள். தீவுப்பகுதி ஒரு பின்தங்கிய இடமாக இருக்கின்றபடியால் இவை பற்றிக்கவனித்து உடன் நடவடிக்கை எடுக்கவும்'' என தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கல்வி மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூதுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரித்துள்ளார்.

தீவுப்பகுதி பன்னிரண்டு பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியருக்கான வெற்றிடங்கள் உண்டென்றும் பதினன்கு பாடசாலைகள் தலைமை ஆசிரியரின்றி இயங்கிவருவதாகவும் பன்னிரெண்டு பாடசாலைகளில் இருபத்திரண்டு ஆசிரியருக்கான வெற்றிடங்களுண்டு எனவும் இவற்றை விரைவில் தீர்க்கும் படியும் வெளியூர்களில் கல்வி கற்பிக்கும் இவ்வூர் ஆசிரியர்களை தீவுப்பகுதியிலேயே கல்வி கற்பிக்க வசதிசெய்து தரும்படியும் எம். பி. கல்வி அமைச்சரைக்கேட்டுள்ளார்.

''ஆசிரியர்கள்

## மாவட்டரீதியானஇடமாற்றம் ஓரளவு பயன் தரலாம்''

பருத்தித்துறை. சனி

'தேவையற்ற ஆசிரியர் இடமாற்றத்தால் கல்வித்தரம் பாதிக்கப்படுவதுடன் ஆசிரியரிடையே அதிருப்தியும் வளர இடமுண்டு.

''தீவுப்பகுதி குளங்கள்

# விண்வெளி சகாப்தத்தை பிரதிபலிக்கும் அகராதி வேண்டும்

### பாரிஸ் மாநாட்டில் தமிழ்நாடு முதல்வர் தெரிவித்த யோசனை

பாரிஸ், ஜூலை 18

**விண்வெளி சகாப்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஆங்கில-தமிழ் அகராதி ஒன்றை தயாரிக்கும் பணியில் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர்களை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.**

விண்வெளிக் கலத்தின் தேவைகளை நிறைவுசெய்யும் அளவிற்குத் தமிழ் மொழி வளர்ச்சியடைய வேண்டுமென்றும் அதற்கான ஏற்பாடுகளை மாநாட்டுப் பிரதிநிதிகள் செய்ய வேண்டும் என்றும் திரு. ... திகதி சென்னை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது

### இலங்கையின் நட்புப் பற்றி கருணாநிதி

தமிழ்நாட்டுடன் இலங்கை ... மனியில் இருந்தபொழுது நிருபர்கள் கேள்விகள் கேட்டனர்.

முன்பிருந்த இலங்கை அரசு உங்களோடு நட்பாக இருந்ததல்லவா? என்று மேற்கு ஜெர்மன் நிருபர்கள் கேட்டபொழுது, முன்பிருந்த இலங்கை அரசு எங்களோடு நட்பாக இருந்தது என்பதற்காகவே இப்போதைய இலங்கை அரசு நட்பில்லாது இருக்கின்றது என்று எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கருணாநிதி பதிலளித்தார்.

கம்யூனிஸ்ட்டுகள் பற்றி உங்கள் கருத்தென்ன வென்று நிருபர்கள் கேட்... கட்சிகளுமே ஜனநாயகவழி முறைகளைத்தான் பின்பற்ற வேண்டும் வன்முறையை எந்த நிலைமையிலும் கைக்கொள்ளக்கூடாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நல்லுறவோடு தான் இருக்கிறோம் என்றார்.

திராவிட முன்னேற்றக்கழகம் இந்திரா அரசாங்கத்[illegible] ஆதரிப்பதேன்என்று கே[illegible] பொழுது இப்போது இந்தியாவில் இரண்டு காங்கிரஸ் கட்சிகள் இருக்கின்றன. நாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு இ[illegible] கிரஸ் வரவில்லை[illegible] அந்[illegible] கட்சி கொஞ்சம் முன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை நிறைவுசெய்யும் அளவிற்குத் தமிழ் மொழி வளர்ச்சியடைய வேண்டுமென்றும் அதற்கான ஏற்பாடுகளை மாநாட்டுப் பிரதிநிதிகள் செய்ய வேண்டும் என்றும் திரு. கருணாநிதி யோசனைகூறினார்.

மூன்றாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை திரு. மு. கருணாநிதி கடந்த 15ம் திகதி பாரிஸில் ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்தினார்.

பாரிஸில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறுவதிலுள்ள பொருத்தத்தை திரு. கருணாநிதி சுட்டிக்காட்டினார். பண்டைக்காலத்தில் பிரெஞ்சு நாகரிகத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்துவந்திருப்பதாகவும் ஆகவே பாரிஸில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடப்பது மிகவும் பொருத்தமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மும்மொழிகளில் பேச்சு

ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனத்தின் தற்காலிக பொது இயக்குநகர் திரு. மால்கம் ஆதிசேஷையா மாநாட்டைத் திறந்துவைத்து பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் பேசினார். தத்துவம், மொழிக்கலை ஆகியவை இணைந்து இருப்பது தமிழ்க்கலாச் சாரத்தின் தனிக்கவர்ச்சியாகும் என்றார் அவர்

### தமிழில் வணக்கம்

தமிழ் நாட்டிலிருந்து மகாநாட்டிற்கு வருகை தந்த தூதுகோஷ்டியின் தலைவர் திரு. கே. மதியழகன் மாநாட்டில் பேச எழுந்ததும் தமிழ்நாட்டு முறைப்படி பிரதிநிதிகளுக்கும் 'வணக்கம்' தெரிவித்தார். டாக்டர்கள் யோசனையையும் பொருட்படுத்தாமல் மாநாட்டில் கலந்துகொள்ள முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி வந்திருப்பது அவருக்கிருக்கும் தமிழ் ஆர்வமே காரணம் என்று மதியழகன் குறிப்பிட்டார்.

### ஆப்ரேஷன் இல்லை

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதியை பரிசோதனைசெய்த பிரிட்டிஷ் டாக்டர்கள் அவருக்கு கண் ஆப்ரேஷன் தேவையில்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். சென்னையிலுள்ள டாக்டர்கள் தெரிவித்த சிகிச்சை முறையே போதுமானது என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்

திரு. கருணாநிதி ஏற்கனவே திட்டமிட்டபடி ஜூலை 21ம்

...என எதிர்பார்க்கப்படுகின்றது

### இலங்கையின் நட்புப் பற்றி கருணாநிதி

தமிழ்நாட்டுடன் இலங்கை அரசுக்கு இருந்துவரும் நட்புப் பற்றி திரு. கருணாநிதியிடம் அவர் மேற்கு ஜெர்...

...நட்பில்லாது இருக்கின்றது என்று எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கருணாநிதி பதிலளித்தார்.

கம்யூனிஸ்ட்டுகள் பற்றி உங்கள் கருத்தென்ன வென்று நிருபர்கள் கேட்டனர் அதற்கு அவர்பதிலளிக்கையில் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல, எல்லா...

...இந்தியாவில் இரண்டு காங்கிரஸ் கட்சிகள் இருக்கின்றன. நாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு இந்திராகாங்கிரஸ் வரவில்லையென்றாலும் அந்தக் கட்சி கொஞ்சம் முன்னேறக் கருத்துள்ளதாக விளங்குகிறது என்றார் திரு. கருணாநிதி.

தெ. ஆபிரிக்காவுக்கு

# ஆயுத விற்பனையை முற்றாக தடை செய்ய முயற்சி

நியுயோர்க், ஜூலை 18

நிறவெறி தென்னாபிரிக்காவுக்கு மற்ற நாடுகள் ஆயுதம் விற்பனை செய்வதை முற்றாகத் தடைசெய்வதற்கான தீர்ப்பு ஒன்றைப் பிரகடனப்படுத்தச் செய்வதற்காக ஆஸிய ஆபிரிக்க நாடுகள் ஐ நா. பாதுகாப்புசபையில் முயற்சி எடுத்துவருகின்றன.

தென்னாபிரிக்காவுக்குபிரிட்டன் ஆயுதம் வழங்கவிருப்பதாக வெளிவந்த செய்தி களைத் தொடர்ந்து இந்த முயற்சிகள் நடைபெறுகின்றன. தென்னாபிரிக்காவுக்கு பிரான்சும், சப்மெறின் எதிர்ப்பு விமானங்களை விற்பதற்கு இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

### மடு உற்சவம்

முசலி, சனி

மாந்தைக் காரியாதிகாரி பிரிவின்கீழுள்ள மடுத்திருப்பதியில் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடக்கவிருக்கும் உற்சவத்தையொட்டி யாத்திரிகர்களின் வசதிகள் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க மாந்தைக் காரியாதிகாரி திரு. முத்தையா சுப்பிரமணியம் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளார்.

— —

### 'வேலணையின் தேவைகள்'

அல்லைப்பிட்டி, சனி

வேலணைக் கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளாகிய குடிநீர்வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி என்பவற்றைச் செய்துதரும்படியும், இப்பகுதி மீன்பிடித் தொழிலாளர், விவசாயிகள், சலவைத் தொழிலாளர்கள் ஆகிய கஷ்டப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து உதவிப்பணம் பெற்றுத் தரும்படியும் வேலணை முதலாம் வட்டாரத்திற்கு ஓர் பெரிய கைத்தறி நிலையம் நிறுவித்தரும்படியும் கோரி வேலணை முதலாம் வட்டார தமிழரசுக்கட்சி வாலிப முன்னணித் துணைச் செயலாளர் திரு. செ. சண்முகரத்தினம் தீவுப்பகுதி எம். பி. யிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளார்.

நீதிமன்றங்களுக்கு

## சிங்கள தட்டச்சு பொறிகள் விரைவில் இடைக்கும்

கோட்டை, சனி

நீதிமன்ற அலுவல்களைச் சிங்களத்தில் நடாத்துவதற்காக நீதியமைச்சர் 33 புதிய சிங்கள தட்டச்சுப் பொறிகளை வாங்கியுள்ளார்.

இதனால் ஆகக்குறைந்தது 7 நீதிமன்றங்களிலாவது சிங்களத்தில் அலுவல்களைக் கவனிக்க முடியுமெனத் தெரிய வருகிறது.

கம்பஹாவிலுள்ள மாவட்ட நீதிமன்றங்களிலும் மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களிலும் ஓகஸ்ட் 3-ம் திகதியிலிருந்து சிங்களத்தில் அலுவல்கள் நடைபெறவுள்ளன.

நீதியமைச்சின் வேறு தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் யாவும் தற்போது நீதிமன்றத்தில் சிங்களத்தில் அலுவல்கள் நடாத்துவதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது என நீதியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. நிஹால் ஜயவிக்கிரமா தெரிவித்துள்ளார்.

### ஆட்சேபம்

பச்சிலைப்பள்ளி, சனி

அம்பன் கிராமசேவையாளர் பிரிவில் குடத்தனைக் கிராமசபையின் 8-ம் வட்டார எல்லைக்குள் வசிக்கும் வாக்காளரின் நாமாவிகள் 8-ம் வட்டாரத்தில் சேர்க்கப்படாமல் குடத்தனைக் கிராம சபையின் 7-ம வட்டாரத்தில் சேர்க்கப்பட்டதை ஆட்சேபித்து நாகர் கோவிலைச் சேர்ந்த குடத்தனை கி. சபையின் 8-ம் வட்டார அங்கத்தவரும் நாகர் கோவில் கிராம முன்னேற்றச் சங்கமும் தேர்தல் அதிகாரிக்கும் உள்ளூராட்சி அமைச்சருக்கும் மகஜர் அனுப்பிவைத்துள்ளனர்.

— —

### மன்னார் மாநில மக்கள் முன்னணி

முசலி, சனி

மன்னார் மாநில மக்கள் முன்னணி என்ற பெயரில் நானாட்டானில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

— —

வெள்ளையர்களாக

### அங்கீகரிக்க நிபந்தனை

கேப்ரவுன், ஜூலை 18

தென்னாபிரிக்காவுக்கு வருகைதந்துள்ள இரண்டு டச்சுக்கப்பல்களிலுள்ள 15 மாலுமிகளையும் வெள்ளையர்கள் என்று அங்கீகரிப்பதென்று தென்னாபிரிக்க அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. இந்த மாலுமிகளில் மேற்கிந்தியர்களும், இந்தோனேஷியர்களும், இந்தியர்கள் ஆகியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள்வெள்ளையர்கள் என்று அங்கீகரிப்பதற்கு அவர்கள் 'யூனிபோம்' அணிந்து கொண்டிருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மனதில் குடியேற இடமளிக்கக்கூடாது.

சலியாத உழைப்பும், நேர்மையான போக்கும் மனோதிடமும் பொறுமையின் பொக்கிஷமுமாக விளங்கும் மாணவர்கள்தான் தமது எதிர்காலத்தில் நாடும் ஏடும் போற்றும் உத்தமர்களாகவும் மேதைகளாகவும் விளங்கமுடியும் என்பது அனுபவ ரீதியாகக்கண்ட உண்மை'' எனக்கூறினார்.

உயர்தரமாணவர் மன்றப் பாதுகாவலர் திருமதி சிவநாராயணமூர்த்தி. உயர்தர மாணவர் மன்றத்தலைவர் திரு. கு. நித்தியானந்தன், செயலாளர் திரு. கந்தசாமி உட்பட மாணவர் பலரும் உரை நிகழ்த்தினர்.

— —

தோட்ட ஆசிரியர்:

### 'அமைச்சரை கோருவோம்'

கோட்டை, சனி

தோட்டப்பாடசாலைகளில் இருந்தும் முகாமையாளர் பாடசாலைகளிலிருந்தும் அரசினர் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரினதும் சேவைக்காலத்தை இணைப்பாற்றுச் சம்பளம் பெறுவதற்கும் இடமாற்றம் பதவி உயர்வு போன்றவற்றிற்கும் சேர்க்கப்பட வேண்டுமென்று ஆசிரிய சங்கங்கள் ஒன்றுசேர்ந்து கல்வி அமைச்சரைக் கோரவேண்டுமென்று நுவரெலியா மாவட்ட அரசினர் தமிழர் ஆசிரிய சங்கப் பொதுக்கூட்டத்தில் திரு. கா, செ. நடராசா ஆசிரியர் பேசினார். இதனைப் பொதுச்சபை ஏற்றுக்கொண்டு தாய்ச்சங்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார் இதனை அடிப்படையாகக்கொண்டு தோட்டப் பாடசாலைகளிலிருந்து பயிற்சிக்கலாசாலை சென்று அரசினர் பாடசாலையில் நியமனம் பெற்றவர்களினதும் சேவைக்காலத்தையும் சேர்க்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்

பின்வருவோர் சங்கத்தின் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. சிங்காரவேலு, துணைத்தலைவர், திரு. யோ. ந. விஜயரத்தினம், செயலாளர் திரு. யோ. ம. பி. ஜெயராசா, துணைச் செயலாளர் திரு. க. சோமசுந்தரம், பொருளாளர் திரு. ச. அருள் சுப்பிரமணியம், துணைப்பொருளாளர் திரு. வே மதிபாலசிங்கம், செயற்குழு உறுப்பினர் திரு. இராசின்னு, திரு. ம. வஸ்தியாம்பிள்ளை, திரு. ஐ. கதி

...சேஸ்வரன். துணைப்பொருளாளர் தெ. கதிர்காமத்தம்பி

### "தீவுப்பகுதி குளங்கள் திருத்தப்பட வேண்டும்''

அல்லைப்பிட்டி, சனி

ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஏற்படும் வெள்ள அழிவுகள் சம்பந்தமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அப்பகுதியில் மாடுகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களையும் எவ்விதம் தடுக்கலாம் என்பது பற்றிய ஆலோசனைக்கூட்டமொன்று தீவுப்பகுதி எம். பி.யின் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது. குளங்களைத் திருத்துவதெனவும் தண்ணீர் பாயும் மதகுகளைப் புதுமுறையில் நிர்மாணிப்பதெனவும் இவைசம்பந்தமான தீர்மானங்களை அடுத்துவரும் மாவட்ட இணைப்புகுழுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. தீவுப்பகுதியிலுள்ள பயிர்ச்செய்கைக் குழுத்தலைவர்கள் தீவுப்பகுதி காரியாதிகாரி கமத்தொழிற் பகுதி உத்தியோகத்தர்கள் கிராமசேவையாளர்கள் கிராம சபைத்தலைவர்கள், நீர்ப்பாசன உத்தியோகஸ்தர்கள் பெருவீதி கண்காணிப்பு பொறியியலாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

— —

### இடமாற்றத்திற்கு பெற்றார் எதிர்ப்பு

பருத்தித்துறை, சனி

உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் வரணி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உசன் மகா வித்தியலய பெற்றார் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சர், மாகல்வியதிகாரி, வடமாநிலக் கல்வியதிகாரி ஆகியோருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பெற்றாரிற் சிலர் பாடசாலைவாசல்களைம் கதவுகளையும் அடைத்து விட்டதால் மாணவர்களோ ஆசிரியரோ பாடசாலைக்குள் செல்ல முடியவில்லை. இதுசம்பந்தமாக கல்வி இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டது.

ராமலிங்கம், திரு. சி. க. கந்தையா, திரு. சி. செல்வரத்தினம்.

## மாவட்டரீதியிலான இடமாற்றம் ஓரளவு பயன் தரலாம்''

பருத்தித்துறை, சனி

'தேவையற்ற ஆசிரியர் இடமாற்றத்தால் கல்வித்தரம் பாதிக்கப்படுவதுடன் ஆசிரியரிடையே அதிருப்தியும் வளர இடமுண்டு. அதிருப்தியுற்ற ஆசிரியன் தனது கடமையைச் சிறப்பாகச் செய்ய முடியாது. இந்நிலைமையில் மாவட்ட ரீதியிலான ஆசிரியர் இடமாற்றம் ஓரளவு நன்மையைத் தரலாமென எதிர்பார்க்கலாம்.'

இவ்வாறு இடைக்காடு இந்துக் கல்லூரி அதிபராகப் பதவிஉயர்வு பெற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து மாறிச் சென்ற திரு. கே. குணரத்தினம் நெல்லியடி வித்தியாலய ஆசிரியப் பேரவை தமக்கு அளித்த பிரியாவிடை வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு மாறிச் சென்ற திரு. எஸ். பி. இராசையாவுக்கும் இதே வைபவத்தில் பாராட்டு வழங்கப்பட்டது.

தலைவர் திரு. ஆர். தாமோதரம்பிள்ளை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திரு. எஸ். சின்னத்தம்பி உரையாற்றுகையில் ஆசிரியர் பாட ஆயத்தத்துடன் மட்டுமே வகுப்பறைக்குச் செல்ல வேண்டுமென்றும் ஆசிரியர் இடமாற்றம் எதிர்காலத்தைப் பாதிக்குமென்பதைக் கல்வித் திணைக்களம் மனதில் கொண்டு கருமமாற்ற வேண்டுமென்றும் சொன்னார்.

— —

## இன்றைய பலன்

ஆடி மாதம் 3-ம் திகதி [19-7-70]

மேஷம்- பொறியியலாளர்களுக்கு இன்று பொன்னான தினம். பூமி விவகாரத்தில் இன்று நல்ல முடிவு ஏற்படும். நிதானம்வேண்டும்.

ரிஷபம்- இதயம் இன்பத்தால் விம்மும். இல்லத்திலும் இனிமை தவழும். உறவினர் மத்தியில் செல்வாக்கு பெருகும்.

மிதுனம்- எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும்.

கடகம்- குடும்பநலனில் அதிக ஆர்வம் பிறக்கும். பந்துக்களின் ஆதரவு பெருகும். பொருள் விஷயத்திலும் முன்னேற்றமுண்டு.

சிங்கம்- இரைமறைவில் சதித்திட்டம் உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

கன்னி- தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம்.

துலாம்- வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும்.

விருட்சிகம்- இன்று உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். வாயுப்பதார்த்தங்களை தவிர்த்துக்கொள்ளவும்.

தனு- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும் சிறிய தலையிடிக்கு இடமுண்டு.

மகரம்- கழுகுப்பார்வை உங்களைவட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம்.

கும்பம்- முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும். இன்று பொன்னான தினம்.

மீனம்- துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையை சோபிதமடையச் செய்யும். ஒரு பெண்ணின் மூலம் அதிக ஆதரவு கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

### நாடு திரும்பும் வண. பிதா

பருத்தித்துறை, சனி

ரோமாபுரியில் உள்ள மதவியல் பல்கலைக்கழகத்தில் 7 ஆண்டுகள் தத்துவம், மதவியல் ஆகிய பாடங்களில் சிறப்புப் பட்டங்கள் பெற்று பரிசுத்த பாப்பரசர் சின்னப்பரினால் குருத்துவ அபிடேகம் பெற்ற வண. பிதா வரப்பிரகாசம் யோசேப் செல்வராசா இம்மாதம் 22-ம் திகதி பாலஸ் தீனத்திலிருந்து ஊர்திரும்புகிறார். அண்மையில்ரோமையில் குருத்துவம் பெற்ற 719 குருமாரில் இவர் மட்டுமே இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது. கரவெட்டியைச் சேர்ந்த இவர் ஆவணி முதலாந் திகதி கரவெட்டி தேவமாதா கோவிலில் விசேட பூசை வைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஜீவாத்மாவும், பரமாத்மாவும் கடிகாரத்தின் இரண்டு முட்களைப் போன்றவை. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் தனித்தனியே இருந்தாலும் சுடிகாரத்தின் இரண்டு முட்களும் அப்போதப்போது ஒன்றையொன்று சந்திப்பது போல் தகுந்த சந்தர்ப்பங்களில் இவையும் ஒன்று சேருகின்றன. —ராமகிருஷ்ணபரமஹம்ஸர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 3-ந் திகதி (19-7-70)


## அரசியல் நிர்ணய சபை

இலங்கையை ஒரு சோஷலிஸக்குடியரசு நாடாக்குவதற்கான புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணயசபையின் முதற் கூட்டம் இன்று முற்பகல் கொழும்பிலுள்ள 'நவரங்கல' மண்டபத்தில் நடைபெறுகிறது. திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலுள்ள கூட்டணியினர் தமது தேர்தல்விஞ்ஞாபனத்தில் ''மக்கள் பிரதிநிதிகளாக நீங்கள் தெரிவு செய்து அனுப்பும் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாகவும் பணியாற்றி புதிய அரசியல் அமைப்பு ஒன்றைத் தயாரித்து நிறைவேற்றிச் செயற்படுத்த உங்கள் கட்டளையைக் கோருகிறோம்'' என்று தெரிவித்திருந்தனர். சென்ற தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தை கூட்டணியினர் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளனர். கூட்டணி அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் மக்கள் பிரதிநிதிகள் சபையை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி புதிய அரசியல் அமைப்பைத் தயாரிப்பது பற்றித் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படாமலே அதாவது ஒருமனதாகவே நிறைவேற்றப்பட்டது. எனவே மக்கள் பிரதிநிதிகள் சபையை அரசியல் நிர்ணயசபையாக மாற்றி புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் தலைமையிலுள்ள கூட்டணியைப் மிகப் பெரும்பான்மையான பலத்துடன் ஆட்சி பீடத்திலமர்த்தியதால் இந்த

மீதும் பிரிட்டிஷ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கைவைப்பது நல்லதா; சிறுபான்மையினர் நாளும் பொழுதும் ஒன்றாக வாழவேண்டிய இந்நாட்டின் பெரும்பான்மை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இந்த நாட்டை ஆட்சிபுரியும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைப்பது நல்லதா?

இந்த நாட்டுக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்கும்போதே இந்தியாவில் காயிதே ஆஜம் ஜின்னா பாகிஸ்தானைப் பெற்றது போல் - தமிழ்ப்பேசும் மக்களும் போராட்டம்நடத்தி தனிநாடு பிரித்திருந்தால் அது வேறு விஷயம். இன்றுள்ள நிலையில் தனிநாடு பெறுவதென்பதும் சுலபமல்ல நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற பயாப்ரா மக்களின் நிலை என்ன; அந்தப் பிரிவினைக்கு வழி காட்டியவர்கள் எங்கே? சிந்திக்கவேண்டிய விஷயம்.

இப்படிச் சொல்வதால் தமிழ்மக்கள் அடிமைகளாக வாழ வேண்டுமென்பது அர்த்தமல்ல இந்நாட்டில் உள்ள சிறுபான்மை இனத்தவர்க்குள் குறிப்பாகத் தமிழ்மக்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லை. ''ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு, ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'' என்று சிறுவயதிலேயே படித்துணர்ந்த தமிழர்களுக்குள்ளேயே வேற்றுமைதான் அதிகம்.

புதிய அரசியல் அமைப்பு இந்நாட்டில் வாழும் சகல மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கும் அம்சங்களைக் கொண்டிருக்கும் என்று புதிய அரசியல் அமைப்புக்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் மற்றும் சில அமைச்சர்களும் உறுதி

# அரசியல் நிர்ணய சபையும் சிறுபான்மை மக்களும்

ஐக்கிய முன்னணி கூட்டாக விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் '' நீங்கள் தெரிவுசெய்யும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் அரசியல் நிர்ணய சபையாகவும் இருந்து புதிய அரசியல் திட்டத்தைத் தயாரித்துஏற்றுச் செயல்படுத்துவதற்கு உங்கள் கட்டளையை நாங்கள் கோருகின்றோம். இந்த அரசியல் திட்டம் இலங்கையை ஒரு சுயேட்சையான சுயஆதிபத்தியமுள்ள சுதந்திரமான சோஷலிச ஜனநாயக குடியரசாக விளங்க வழிவகுப்பதோடு எல்லாக் குடிமக்களுடையவும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதாகவும் அமையும்'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மக்களிடமிருந்து இந்தக் கட்டளையைத்தான் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்பாத்தது.

ஆனால் மக்களோ நீங்கள் எதிர்பார்ப்பது மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மைதானே. நாங்கள் நாலில் மூன்றுபங்கு பெரும்பான்மையைத் தந்திருக்கின்றோம். உங்கள் வேலையை தாமதப்படுத்தாமல் செய்யுங்கள் என்று கூறிவிட்டிருக்கிறார்கள்.

### தமிழரசுக் கட்சி

இவ்விடயமாக மக்களின் தீர்ப்பு கோரப்படாத நிலையில் கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஒரு பொதுசனவாக்கெடுப்பாகக் கொள்ளமுடியாது என தமிழரசுக்கட்சி கூறி அரசியல் நிர்ணய சபையை எதிர்ப்பதாக முடிவுசெய்துள்ளது.

யாரும் இக்கட்டளையைப் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு என்று கூறவும் இல்லை. இவ்விதமான கட்டளைக்கு பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு தேவை என்றும் சொல்லமுடியாது.

இந்த அடிப்படையில் தமிழரசுக்கட்சி கடந்தபொதுத் தேர்தலில் மக்கள் இவ்வரசாங்கக்கட்சியையே அரசியல் நிர்ணய சபையாக இருக்கலாம் என மக்கள் கட்டளை அளித்தனர் என்ற அரசாங்கத்தின் கொள்

29 (2) ஷரத்து இன்றைய பாராளுமன்றம் ஆக்கும் எந்தச் சட்டம் சம்பந்தமாகவும் பாதுகாப்பு பிரிவாகும் 1/3 பெரும் பான்மை வாக்கினால் இலங்கை அரசியல் சட்டத்தை முற்றாக மாற்றி அமைத்தாலும் 29 (2)ம் (3)ம் ஷரத்துககள் இருந்தவாறே இருக்கும். இலங்கை ஆட்சிமன்றம் கூட்டம் ஆக்கும் சக்தியை கட்டுப்படுத்திக்கொள்வதே இதன் பயனாகும்.

ஆகவே முன்னர் உருவாக்கப்பட்ட முன்னைய சட்டங்கள் அரசியல் நிர்ணய சபையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது இந்த அரசியல் நிர்ணயசபை தற்போதைய அரசியல் திட்டத்தையும் ஆட்சிமன்றத்தையும்நீக்கி தங்களுக்கென சொந்த அரசியல் திட்டத்தை ஆக்கலாம்.

### உண்மையான பாதுகாப்பு

எல்லாக் குடிமக்களுக்கும் உரிய உரிமைகளுக்கும் புதிய அரசியல் திட்டத்தில் பாதுகாப்பளிக்கப் படலாம்

## 29-வது ஷரத்தில் தொங்கிக் கொண்டிருக்கத்தான் வேண்டுமா?

ஆனால், அரசியல் திட்டத்தில் உப ஷரத்துக்களால் சிறுபான்மையினரைப் பாதுகாக்க வேண்டுமென்று நினைக்கத் தேவையில்லை. சிறுபான்மைமக்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பாதுகாப்பதற்கு 'சொற்கள்' போதாது. உலகின் எப்பகுதியிலும்இம்முறை வெற்றி பெறவில்லை.

பொது எதிரியுடன்போராடும் மக்களுடனும் பொதுசுபீட்சத்துக்காகப் போராடும் மக்களுடனும் கையோடு கைசேர்த்துச் சென்றால் தான் சிறுபான்மை மக்கள் [illegible]கள் சமத்துவத்தைப் பெறமுடியும்.

சிறுபான்மையினர் தங்களுக்கென அரசியல் கட்சிகள் அமைத்து இய[illegible] தேசியக் கட்சிகளோ[illegible] [illegible] வாழ்வதே சிறுபான்மை

அரசாங்கம் விழிப்பாக இருக்காவிட்டால் இலங்கையிலும் இது நடக்கக்கூடும்.

### வர்க்கப்பண்பு

ஐ தே.கட்சியும், தமிழரசுக்கட்சியும் வேறாக இருந்து கொண்டே ஒரே சுருதியில் செயல்படுகின்றன. சுரண்டல் வர்க்கம் சமூகஇணக்க மாற்றத்தை எதிர்ப்பது முன்னேற்றமும் அத்தியாவசியமானதுமான நடவடிக்கை என்று கருதுகின்றது.

வி. சச்சிதானந்தம்

சுரண்டப்படும் வர்க்கம் இப்படியான சமூக இணக்க மாற்றத்தினால் பெருமுன்னேற்றங்கள் ஏற்படும் என்று கருதுகிறது. இப்படிப்பட்ட மாற்றங்கள் அவர்களுக்கு மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் அளிக்கும் என்று கருதுகிறார்கள். ஆனால் மற்ற வர்க்கத்தினரின் சுகபோகங்களை இவை அழித்துவிடும்.

தன்னுடைய நிலைத்ததன்மையை நிலைநிறுத்தபோராடாத எந்த இனமாவது உண்டா? தன்னைப் பாதுகாப்பதற்கு உணர்வு இல்லாத எந்த இனமாவது இருக்கின்றதா? தனது வர்க்கத்திற்கு நன்மையான விடயத்தைச் செய்வதே சமூக ஆட்சியாகும். அந்த வர்க்கம் தன் நிலைத்திருக்கும் தன்மையை மாற்றுவதை மனித சமுதாயத்தின் அடிப்படையையே தகர்ப்பதாக அவ்வர்க்க அங்கத்தவர்கள் கருதுவர். இந்த அடிப்படை பலாத்காரம் மூலமாவது காக்க அழைக்கப்படுவதாக அவர்கள் சிந்திக்கிறார்கள், இதன் காரணமாகவே ஆபத்து தோன்றுகின்றது.

### வேறுபட்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள்

கால ஓட்டத்தில் இந்த அபாயம் அதிகரிக்கின்றது எனவே புத்துயிர் பெறும் சுதந்திரசமூகத்திற்கு காலம் உறுதுணையாகும். அரசாங்கத்தினால் ஏற்படுத்தக்கூடிய புரட்சிகர மாற்றங்களில் ஏற்படும் காலதாமதம் குறித்து மக்கள் பொறுமையிழந்திருக்கிறார்கள். அவர்கள் பெரிதாக எதிர்பார்க்கின்றனர். அரசாங்கங்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை பெரிதாக் நினைக்கலாம். ஆனால் மக்கள் தாம் நெஞ்சாரத்தழுவிய ஒரு விஞ்ஞாபனத்துக்கு வாக்களித்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் மக்கள் தம் தலைவர்களை விட முன்னேறிவிட்டிருக்கிறார்கள்.

### புரட்சி

மாற்றங்கள் தேவைப்படும்போது அவைஏற்படாமல் சுயநலம் காரணமாக மாற்றத்தை தடுப்பதனால் புரட்சி தவிர்க்கமுடியாததாகிவிடுகின்றது என்று ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டுள்ளார். தேசம் முன்னேறும்பொழுது அரசியல் திட்டங்கள் மாறாமல் இருப்பதே புரட்சிக்குக் காரணம் என்று மாக்கலே கூறுகிறார்' இலங்கையில் மக்கள் முன்னேறிவிட்டார்கள் வெறும் வார்த்தைகளால் அல்லாமல் உண்மையாகவே நல்லகாலம் வந்துவிட்டது என்று புதிய அரசியல் திட்டத்தின் மூலம் கேட்கவேண்டும் என்று அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### சோஷலிச ஜனநாயகம்

சோஷலிச ஜனநாயகத்தின் நோக்கங்களை அடைவதற்கு ஒரு அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கான கட்டளையை மக்கள் பிறப்பித்திருக்கிறார்கள். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமிடையே உள்ள இடைவெளி பெருப்பதோடு சுரண்டுதல் மேலும் வலுப்பெற்று வரும் இந்தியாவிலுள்ள 'சோஷலிசப்பாணி' போன்றதல்ல இது. நாங்கள் தூய சாதாரண சோஷலிச ஜனநாயகத்தை விரும்புகின்றோம். அதாவது மக்களிடத்து அதிகாரம் இருக்க வேண்டும்.

எந்த அரசியல் கட்சி ஆட்சி அமைத்தாலும் செல்வம் உடையவர்கள் ஆதிக்கமும் நீடிக்கின்றது. செல்வத்துடனேயே அதிகாரமும் செல்கிறது. ஆகவே சோஷலிச செல்வத்தின் மூலம் மக்களுக்கு சோஷலிச ஜனநாயகத்தை அளிக்க முடியும்.

1970-ம் ஆண்டுத் தேர்தல் அரசியல்மாற்றத்தையே ஏற்படுத்தியது. இவ்வித சோஷலிச மாற்றத்தை காலதாமதமாகாமல் உடனடியாகச் செயல்படுத்தாவிட்டால் ஒரு புரட்சியோ அல்லது பிற்போக்கு சக்திகளிடமே மீண்டும் அதிகாரம் போய் ஆட்சிமன்ற முறையும் வாக்குரிமையும் பறி போகலாம்.

### அடிப்படை உரிமைகள்

எல்லா குடிமக்களும் தங்கள் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதான அரசியல் திட்டத்தை ஆக்குவதற்காகவும் மக்கள் தங்கள் அனுமதியைக் கொடுத்திருக்கிறார்கள். மிக முக்கியமான அடிப்படை உரிமையாவது வாழ்வுரிமையும் சுதந்திரத் தொழில் உரிமையும் ஏழ்மை ஒழிப்பும் வேலையின்மையை நீக்குவதுமாகும். எந்தசோஷலிச அரசியல் திட்டமானாலும் அது இவற்றை உறுதிப்படுத்தும். எப்படியிருப்பினும் இவ்வித உரிமைகளைச் செயல்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவை.

### முதிர்ச்சி

இங்கிலாந்தில் வெற்றி வீரரான வின்சன்ட் சேர்ச்சில் இரண்டாவது மகா யுத்தம் முடிந்ததும் தூக்கி எறியப்பட்டு அட்லிபிரபு பிரதமமந்திரியானார். அந்த மக்கள் நன்றியற்றவர்களல்ல அவர்கள் பக்குவமடைந்தவர்கள் என்பதே இதற்குக் காரணம். நாட்டின் எதிர்காலத்தில் மக்கள் வைத்திருக்கும் அக்கறைகளுடன் கூட்டணி தலைவர்கள்மீது அவர்களுக்குள் நன்றியையும் சங்கமப்படுத்திக்கொள்ளும் அளவுக்கு நம்மக்களும் பக்குவமடைந்து விட்டார்கள்.

அரசாங்கத்துக்கு அதிர்ச்சி ஏற்படத் தேவையில்லை. கடந்த 1955, 1960 ஜூன், 1964 டிசம்பர், 1970 ஆகியஆண்டுகளில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் இலங்கையில் இடம்பெற்றுள்ளன. எதிர்பாராதவை இனிமேலும் இடம்பெறாது என்ற நிலையும் மாறிவிடவில்லை.

# தமிழனின் இதயபூர்வமான மனிதாபிமானமே அவனது சர்வதேசத் தொடர்பின் அத்திபாரம்

— டாக்டர் மல்கம் ஆதிசேஷய்யா —

இம்மாதம் 15-ம் திகதி பேராசிரியர் ஜீன் பிலி[illegible] தலைமையில் பாரிஸில் நடைபெற்ற 3-வது உலகத்தமிழ்[illegible]ய்ச்சி

இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழங்குடி மக்களான திராவிடர்களின் நாகரீகமே இந்திய உபகண்டத்தின் நாகரீகத்திற்கு முன்னோடி என்பது ஆராய்ச்சியாளர்

யட்டின் கவிதையிலே நான் நடராஜப் பெருமானின் இதே வடிவைக் காண்கிறேன் அதன் பொழிப்புரை பின்வருமாறு:

'சுழல்கின்ற உலகத்தில்

னில் ஒன்றாக இருத்தல்.

விரிந்து பரந்த ஆசியகத்திற்கு ஒரு தனிச்சிறப்புண்டு. அது, அதன் பூரண சமாதான இயல்பும் ஆகும். அநேகமாக சரித்திரத்தில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வதற்கு திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் தலைமையிலுள்ள கூட்டணியைப் மிகப் பெரும்பான்மையான பலத்துடன் ஆட்சி பீடத்திலமர்த்தியதால் இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களும் அரசியல் நிர்ணய சபை பற்றிக் குறிப்பிட்ட சிம்மாசனப் பிரசங்கத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டதன் மூலம் இந்த நாட்டு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

நமது நாடு 1948-ம் ஆண்டில் அரசியல் சுதந்திரம் பெற்றபோதும் அது பூரணசுதந்திரம்பெறவில்லை. இன்றுள்ள அரசியல் சட்டப்படி பிரிட்டிஷ் மகாராணிதான் நமது நாட்டின் மகாராணியுமாவார். நமது நாடு முற்றாக அந்நியரின் பிடியிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்பதில் இங்குள்ள மக்களுக்கிடையில் அபிப்பிராய பேதமில்லை. இதனால்தான் இலங்கையை ஒரு குடியரசு நாடாக்கும் யோசனையை 1956-ம் ஆண்டிலிருந்து அனைவரும் வரவேற்றுவந்துள்ளனர்; அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுவந்தனர்.

ஆனாலும் 1956-ம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற சம்பவங்களில் இருந்தும் அவற்றின்மூலம் பெற்ற அனுபவங்களில் இருந்தும் சிறுபான்மையினர் குறிப்பாகத் தமிழ்மக்கள் புதிய அரசியல் அமைப்புத் தமக்கு பாதகமாக அமைந்துவிடுமோவென்று அஞ்சுகிறார்கள் இந்த அச்சத்தில் நியாயமில்லையென்று யாரும் கூறவும் முடியாது,

இப்போதைய அரசியல் அமைப்பிலுள்ள 29-வது ஷரத்து சிறுபான்மையினருக்கு ஓரளவாவது பாதுகாப்பளிக்கிறதென்றும் (இந்தப் பாதுகாப்புக் கூட 'பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல்செய்து அந்த நீதிபதிகள் அளித்த தீர்ப்பினால்தான் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது) இலங்கை குடியரசானால் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமை இல்லாது போய்விடுமென்றும் அஞ்சுவதிலும் நியாயமுண்டு

ஆனாலும் சிறுபான்மை மக்களுக்கு பிரிட்டிஷ் மகாராணியார் கடந்த இருபத்திரண்டு வருட காலத்தில் எந்தவகையில் பாதுகாப்பளித்து உதவிபுரிந்திருக்கிறார்? லண்டனிலேயுள்ள பிரிட்டிஷ் மகாராணியார்

அமைப்புக்குப் பொறுப்பான அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவும் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் மற்றும் சில அமைச்சர்களும் உறுதியளித்திருக்கிறார்கள். இந்த வாக்குறுதிகள் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போனவையென்றும் தமிழ்இனமே நம்பிக் கெட்ட இனம்தானென்றும் பழைய அனுபவங்களிலிருந்து சிலர் வாதிடலாம்.

ஆனாலும் பெரும்பான்மை மக்கள் நம்பிக்கை வைத்து புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு தங்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரமளித்துள்ளபோது, புதிய அரசியல் அமைப்பை நீங்கள் உருவாக்கமுடியாது என்று சிறுபான்மை இனத்தவர்— அதிலும் கூட — வேறுபட்ட கருத்துடையவர்கள் சொல்வதும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சிலரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறாமலே -சொல்வதும் சிறுபான்மையினர் குறிப்பாகத் தமிழ் மக்கள் மீது பெரும்பான்மை மக்கள் சந்தேகம் கொள்ளவும் அவநம்பிக்கை கொள்ளவுமே வழிவகுக்கும்.

இன்றுள்ள நிலையில் அரசியல் நிர்ணயசபை உருவாவதற்கு தமிழ்மக்கள் அதாவது தமிழ்ப் பிரதிநிதிகள் ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்து புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் போது தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை— கெரும்பான்மைச் சமூகத்தினருடன் ஒத்துழைப்புடன்- அரசியல் அமைப்பில் சேர்த்துக்கொள்ளச் செய்வதில்தான் தமிழ்ப் பிரதிநிதிகளின் அரசியல் விவேகம் தங்கியிருக்கிறது.

இப்பொழுது தேவை நல்லெண்ணம், நட்புறவு நல்லுறவு, ஒற்றுமை.

சட்டத்தையும் சட்டமூலையையும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

## பாராட்டுவிழா

பச்சிலைப்பள்ளி, சனி

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரியைப் பாராட்டுமுகமாக கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் திரு. மி நீக்கிலாப்பிள்ளை தலைமையில் கடந்த சனிக்கிழமை ஒரு விழா நடைபெற்றது.

தேர்தலில் மக்கள் இவ்வரசாங்கக்கட்சியையே அரசியல் நிர்ணயசபையாக இருக்கலாம் என மக்கள் கட்டளை அளித்தனர் என்ற அரசாங்கத்தின் கொள்கையை ஆதரிக்க முடியாது என்று கூறுகின்றது.

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களிடமிருந்து சமஷ்டிக்கு அனுமதிபெற்றுவிட்டதாகச் சொல்லிக் கொள்கின்றது ஆனால் தமிழ்மக்கள் தமிழ்க் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும் ''நீங்கள் தமிழரால் ஆளப்பட வேண்டுமானால் தமிழரசுக்கு வாக்களியுங்கள். சிங்களவர்களால் ஆளப்பட வேண்டுமானால் ல. ச. ச. கட்சிக்கு வாக்களியுங்கள்'' என்பதே வட பகுதியில் சுலோகங்களாகக் கோஷிக்கப்பட்டன. எனவே இம்முறையில் பெற்ற தமிழர்களுடைய அனுமதியை சமஷ்டிக் கொள்கைக்கான கட்டளையாகக் கூற முடியாது.

## 29-வது ஷரத்து

அரசாங்கம் இப்பொழுது இருக்கும் அரசியல் திட்டத்தை விடுத்து புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கப் போகிறதென திட்டமாகச் சொன்ன பொழுதும் இப்பொழுது உள்ள அரசியல் திட்டத்திலுள்ள சில சரத்துக்களை அதில் இருப்கும்படி பார்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு தமிழரசுக்கட்சியினர் ஆலோசனை கூறியுள்ளனர். அரசியல் திட்டத்திலுள்ள 29 சரத்து தமிழர்களைப் பாதுகாக்குமெனச் சொல்லி திரும்பவும் தமிழ்மக்களுக்கு தமிழரசுக்கட்சியினர் தவறான வழிகாட்டுகின்றனர். இந்தச் சரத்து கடந்தகாலத்தில் சிறுபான்மையினருக்கு சிறிய அளவிலேயே பயன்பட்டது. சிறப்பாக எல்லா வகையிலும் சிறுபான்மையினரைப் பாதுகாக்கவில்லை. இந்தப் பயன்படாத சரத்தைவிட, சிறப்பானமுறையில் பாதுகாக்கும் சரத்துக்களே எமக்குத் தேவை.

29 (3) ஷரத்து பின்வருமாறு கூறுகிறது: இந்த ஷரத்தின் (2) உபவிதிக்கு முரணாக உருவாக்கப்படும் எந்தச்சட்டமும் செல்லுபடியாகாது.

இங்கே 'எந்தச்சட்டமும் என்றால் இப்போதையஆட்சிமன்றத்தால் ஆக்கப்படும் எந்தச் சட்டத்தையும் குறிப்பதாகும் 29 (1) ஷரத்து குறிப்பிடுகின்றது.

இந்தக் கட்டளை விதிகளுக்கமைய ஆட்சிமன்றம் சட்டங்களை உண்டாகுவதற்கான அதிகாரத்தை பெற்றிருக்கும்......

0 0 0

பெறமுடியும்.

சிறுபான்மையினர் தங்களுக்கென அரசியல் கட்சிகள் அமைத்து இயங்காமல் தேசியக் கட்சிகளோடு சேர் [illegible]வாழ்வதே சிறுபான்மை மக்களின் உண்மையான பாதுகாப்பு என சோல்பறி அறிக்கையே சுட்டிக் காட்டியுள்ளது. சேர் ஐவர் ஜென்னிங்ஸ்கூட இவ்வாறே கூறியுள்ளார். இவர் எழுதிய பிரித்தானிய அரசியல் திட்டம்என்னும்நூலில்யூதர்கள் பிரித்தானியாவில்ஒடுக்கப்படமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் தேசியக்கட்சிகளுக்கே வாக்களிக்கிறார்கள். யூதர்களுக்கென அவர்கள் தனியாக ஒரு கட்சி வைத்திருக்கவில்லை. ஸ்கொட் மக்கள் ஸ்கொட் தேசியக் கட்சி என சொல்லப்படும் கட்சியைத் தனியாக வைத்திருந்தாலும் ஸ்கொட்லாந்து மக்கள் ஸ்கொட்லாந்து கட்சிக்கும் இங்கிலீஷ் மக்கள் இங்கிலீஷ் கடசிக்கும் வாக்களிக்கும் நாள்வந்தால் ஸ்கொட்லாந்து மக்கள் ஒடுக்கப்பட்டு ஐக்கியம் குலைந்துவிடும் என சேர் ஐவர் ஜென்னிங்ஸ் எச்சரித்துள்ளார். இலங்கை இந்தியர் தங்களுடைய கட்சிக்கும் இலங்கைத் தமிழர் தங்களுடைய கட்சிக்கும் வாக்களிப்பது திரு ஐவர் ஜென்னிங்சின் கூற்றை உண்மைப்படுத்துவதாகவுள்ளது. மேலும் முஸ்லிம் மக்கள் நிலை இதனை உறுதிப்படுத்தும். ஒரு முஸ்லீம்கூட அரசியல் திட்டத்தில் தமக்குப் பாதுகாப்பைத் தேடவில்லை.

## ஐ. தே. கட்சி

ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு மக்கள் கட்டளையைத் தடைசெய்யலாமென சட்ட ஆலோசனையை நாடி வருகின்றது. மே 27-ம்திகதி வரை புனிதமான வாக்குச் சீட்டுகள் என்று பகிரங்கமாகக் கூறிவந்த டட்லி சேனநாயக்கா கேகாலை கச்சேரியில் கூடியிருந்த டெடிகம தொகுதி மக்கள் முன் பேசவும் பிரதமராகவிருந்து விலகிச்செல்வதை யொட்டி றேடியோவில் செய்தி விடுக்கவும் மறுத்ததின்மூலம் வாக்குச்சீட்டின்மீது நம்பிக்கையில்லை யென்பதை வெளிப்படுத்திவிட்டார்.

முதலில் வாக்குச்சீட்டுக்கு புனிதம் கற்பித்துவிட்டு தங்களுக்கு ஆபத்து வந்ததும் அதனை மறுதலிப்பதும் சுயநலக்காரர்களால் மேற்கொள்ளப்படும் முதல் நடவடிக்கை இதுவல்ல. இதற்குரிய நன்மைகள் அபாயத்துக்குரியவை

இந்நிகழ்ச்சிகள் பிரான்ஸ், ஸ்பெயின், பிறேசில் நாட்டிலும் நடந்திருக்கின்றன.

**இம்மாதம் 15-ம் திகதி பேராசிரியர் ஜீன் பிலியோசாவின் தலைமையில் பாரிஸில் நடைபெற்ற 3-வது உலகத்தமிழ[illegible]ய்ச்சி மகாநாட்டை யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவி டைரக்டர் ஜெனரல் மல்கம் ஆதிசேஷய்யா திறந்து வைத்து நிகழ்த்திய உரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.**

இந்த மகாநாட்டிலே முதற்கண் கவனம் செலுத்தப்படும் பொருட்களில் தமிழ்மொழி, இலக்கியம் இவை இடம் பெற்றிருப்பது மிகப்பொருத்தமாகும். 2,000 ஆண்டுகளுக்கு மேலாக, அழியாமல் குறையாமல் நிறைந்திருக்கும் தமிழ்மொழியே தமிழ் மக்களின்இடையறுதொடர்ச்சிக்குப் பெரும் காரணமாகும். கற்றோர் கவனத்தைக் கவர்ந்த மற்றொரு தனிச் சிறப்பும் இம்மொழிக்கு உண்டு. இது சமுதாயத்தின் சிறப்பு மொழியாக மதம் கல்வி போன்ற துறைகளுக்கு மட்டுமன்றி மக்களின் அன்றாட வாழ்வோடு இரண்டறக்கலந்து ஜீவசக்தியுடன் இன்றும் விளங்குகிறது.

தமிழ்ப் பெருமக்களின் நாகரிகத்தில் இரு விசேஷ இயல்புகள் உண்டு இவையே அவர்கள் மொழிப்பற்றுக்குக்காரணம் கூறுகின்றன. ஒன்று, சங்கம் நிறுவியது. அன்று உருவான இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என்றேகூறப்பட்டன. மற்றொன்று, தொல்காப்பியம் போன்ற விரிவான, நுட்பமான இலக்கண நூல்கள் அக்காலத்திலேயே வழக்கிலிருந்து இவ்வாறு இரு கலாச்சாரத்தின் தொடர்ச்சிக்கு மிகச் சக்திவாய்ந்த சாதனங்களான இரண்டு அம்சங்களும் அதாவது, மொழி வளர்க்கும் சங்கங்களும், அந்த வளர்ச்சி முறையோடு அமைவதற்கான இலக்கணங்களும் தொன்மையான தமிழ் சரித்திரத்தின் ஆரம்ப ஏடுகளிலேயே ஆழமாகப் பதிந்துவிட்டன.

இருப்பினும், இந்தஉலகத் தமிழ்மகாநாடு சொல்லையும், எழுத்தையும் மாத்திரமே, முக்கியமாகக்கருதவில்லை தென்னிந்தியக் கலாச்சாரத்தின் சின்னங்களான நிர்மாணக்கலை, மற்றும் சிற்பம் சித்திரம் போன்ற எழில் கலைகளும் இங்கு தகுந்த இடம் பெறுகின்றன. பல துறையினர் கூடி நடாத்தும் இம்மகாநாட்டின் பிரிவுகளில் முதல் முறையாகப் புதைபொருள் ஆராய்ச்சிக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழங்குடி மக்களான திராவிடர்களின் நாகரீகமே இந்திய உபகண்டத்தின் நாகரீகத்திற்கு முன்னோடி என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. சிந்து நதிப்பள்ளத் தாக்கில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருள் சின்னங்கள் இக்கருத்துக்குப் புதிய ஆதரவு அளித்தன. கம்போடியா நாட்டில் கிமர் கட்டிடக்கலையில் அண்டத்தின் சின்னமாகக்கருதப்படும் மலைவடிவக் கோயில்களைக்காண்கின்றோம். சிந்து நதியிலிருந்து கம்போடியா வரை, அதற்கும் அப்பால் போரோபுதூர் வரை தமிழ் கலாச்சாரம் விரிந்துபரந்து, காலத்தால் கரையாது விளங்கியதற்குச் சான்றாக பல சின்னங்கள் வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்கின்றன. ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயம்,ராமேசுவரம் கோயில் முதற்கொண்டு பல தென்னிந்தியக் கலைச்சின்னங்களை பாதுகாக்கும் நீண்ட காலத்திட்டத்தில் யுனெஸ்கோ ஸ்தாபனம் ஒத்துழைக்கின்றது.

இத்துறையிலும் பல நிர்மாணக்கலை பற்றியதொன்மையான நூல்கல் சிற்பசாத்திரத்துள் அடங்கியுள்ளன. இவை மானஸாரா, மாயாமாதா போன்ற ஆகம நூல்களைச் சேர்ந்தவை, தமிழரின் கோயில் கட்டும் கலை பற்றியும் அவர்கள் கையாண்ட நகரஅமைப்பு பற்றியும், இவற்றிலிருந்து இன்றைய மாணவர் அறிந்து கொள்ளலாம்.

இதே ஆன்மீக உட்பொருளையே சிற்பக்கலையிலும், மற்றும் அதை மருவிய கலைகளிலும் காண்கிறோம். சைவத்தைத் தழுவிய பல மஹாபுருஷர்கள் எவ்வுயிர்க்கும் பொதுவான பரம்பொருளைப் பற்றித் தங்கள் உணர்ச்சிகளைக் கவிதை வடிவிலே அளித்திருக்கிறார்கள். இதற்கு இணையாகத் தென்னிந்திய வெண்கலச் சிற்பங்களில் பெரிதும் காணப்படும் நடராஜர் மனித குலத்தின் மாபெரும் கலைச்சின்னங்களில் ஒன்றாகவே அமைந்துவிட்டது இது சிவபெருமானின் மற்றொருவடிவமாகும். அந்த ஆடலரசன் உருவத்திலே உயிரும் உயிரின்மையும் ஒன்றே ரூபமும்-அரூபமும் ஒன்றே- அமைதியும் அசைவும் ஒன்றே. அந்த ஆனந்தத் தாண்டவத்தில் உடலும் ஆவியும் இரண்டறக்கலந்துவிட்டது என்கிறார் அந்த ஆனந்தகுமாரஸ்வாமி இவர் இலங்கையைச் சேர்ந்த புகழ்பெற்ற சரித்திர ஆசிரியரும், கலாவிமர்சகரும் ஆவார். டி. எஸ். எலியட்டின் கவிதையிலே நான் நடராஜப் பெருமானின் இதே வடிவைக் காண்கிறேன் அதன் பொழிப்புரை பின்வருமாறு:

'சுழல்கின்ற உலகத்தில் சுழலாத ஒரு இடம். ஊனுமில்லை, ஊன் இல்லாமலுமில்லை, அதிலிருந்துமில்லை, அதைநோக்கியுமில்லை,அந்த அசைவற்றஇடத்தில் நடனமுண்டு,ஆனால் அங்கு தடையுமில்லை அசைவுமில்லை. அதை நிலையானது என்று நினைக்கவேண்டாம், இறந்த காலமும் வருங்காலமும் ஒருங்கே இல்லை,நடனம் மட்டும் உண்டு'.

ஆன்மீக அறிவுடைய நிலைக்கும், நன்னெறியில் அமையும் வாழ்க்கை அனுபவத்திக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு,தமிழ் கலாச்சாரத்தின்அடிப்படைப்பண்பாடு என்பது பலரும் அறிந்த உண்மை.உலகசக்தியையும், வாழ்க்கையில் உறுதியான் தன்னம்பிக்கையையும் குறளிலே கண்டார் டாக்டர் ஆலிபர்ட் ஸ்வெட்ஜர். இலக்கியம், தத்துவம் இவற்றில் தனிச்சிறபுடன் விளங்கும் இந்தப் புராதன நூல், எளிய நீதி நெறியின் வழியே இயங்கும் மனித இனத்தையே இலட்சியமாகச் சித்தரிக்கியது என்று அவர் கூறுகிறார்.

இந்திய நாகரீகத்தில் தமிழ் மக்களின் பங்கும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.குறிப்பாக ஸமஸ்கிருத மொழியோடு இதன் தொடர்பு ஆராயப்படும். இதுவரைத் திராவிடர்களைப் பற்றி ஆராய்ச்சி அதிகம் கவனிக்கப்படாமல் இருந்தது இன்றுபெரும்பாலும் இதை இனைத்தே ஸமஸ்கிருதமொழி ஆராய்ச்சியைப் புதுப்பிக்கமுடியுமென்று அம்மொழிப் பண்டிதர்களே உறுதியாகக் கூறுகிறார்கள்.

தமிழாராய்ச்சி என்பது உண்மையாகவே ஒரு சர்வதேச ஆராய்ச்சி என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. அவற்றில் சில-

(1)தமிழர் நாரீகம் கடல் கடந்து இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ் முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவியது.

(2)சீன தேசத்தில் புதைபொருள் ஆராய்ச்சிஸ்தலங்களில் கண்டுபிடிக்கப்பெற்ற தமிழ் கல்வெட்டுக்கள்.

(3) பர்மா, கம்போடியா, தாய்லாந்து நாடுகளில் நடைமுறையில் காணப்படும் விழாக்கள். சடங்குகள்.

(4)இந்தியப் பெருங்கடல் மூலம் நடத்தப்பட்ட வாணிபத்தைப் பற்றிய ஆராய்ச்சி கிழக்கு ஆபிரிக்காவின் சரித்திரத்திற்கான மூலாதாரங்களில் ஒன்றாக இருத்தல்.

விரிந்து பரந்த ஆதிக்கத்திற்கு ஒருதனிச்சிறப்புஉண்டு. அது, அதன் பூரண சமாதான இயல்பும் ஆகும். அநேகமாக சரித்திரத்தில் வேறுஎந்த நாகரீகமும் கத்தியின்றி, இரத்தமின்றி முழுமையும் வாணிபம் கலாச்சாரம் இவை மூலமாகவே, தனது செல்வாக்கை இவ்வளவு தூரம் ப்ரப்பியதில்லை.ஆங்காங்குள்ள பண்பாடுகளோடு தமிழ்ப்பண்பாடு நன்கு ஒன்றி இணைந்தது.மனம் திறந்து நிறைந்த இந்த சர்வதேசத் தொடர்பின் அஸ்திவாரம், கடல்கடந்த வாணிபம், மாத்திரமல்ல, தமிழனின் ஆழ்ந்த இதயபூர்வமான மனிதாபிமானம் என்றே கூற வேண்டும். இதையே ஒரு தமிழ்ப் புலவர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறினார்.

அகில உலகத்திற்கும் பொதுவான இந்த பண்பாடு, இன்றைய சர்வதேச கலாச்சாரத் தொடர்புகளினால் புத்துயிர் பெறலாம் தமிழாராய்ச்சி பூரண உயிர்த் துடிப்புள்ள ஒரு கலாச்சாரத்தோடு சம்பந்தப்பட்டது. அது கேவலம், மொழி அல்லது சரிதிர ஆராச்சியாக மட்டும் இருந்துவிடக் கூடாது. இந்த ஆராய்ச்சி இன்று,நல்லதொரு கலாச்சாரத்தின் நறுமனத்தை உலகெங்கும் பரப்புவதற்கு உரிய சாதனமாகத் தமிழை உயர்த்தவேண்டும். இதுவே நமது குறிக்கோளென்று நான் நினைக்கின்றேன்.

## ஆலோசனை

கோட்டை, சனி

சட்டக்கமிஷன் சமரச சபைக் கூட்டங்கள் இரகசியமாக நடைபெற வேண்டுமென ஆலோசனை தெரிவித்துள்ளது.

## சஞ்சிகைகள் களவு

சித்தங்கேணி, சனி

சித்தங்கேணி கலைநகர் நேருஜீ சனசமூக நிலைய வாசிகசாலையில் வைக்கப்படும் சஞ்சிகைகள் தினமும் களவாடப்படுகின்றனவாம்; இதுசம்பந்தமாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கலைநகரில் தற்போது கள்வர் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org